
"கோப்பாய் - சிவம்"



# நன்றிக்கடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளோட்டம்

( இரு குறுநாவல்கள் )

"கோப்பாய் - சிவம்"

வெளியீடு:-
யாழ். இலக்கியவட்டம்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| Title | - | VELLODDAM (Two Short Novels) |
| Author | - | P. Sivanandasarma (Kopay - Sivam) |
| Adress | - | Near Sivan Temple Avarangal Puttur. |
| Published by | - | Yarl Ilakkiya Vaddam, JAFFNA. |
| Copyright | - | To the Author. |
| Printed At | - | Sarvasakthi Gurukulam Kilinochchi |
| Date of Publication | - | 1986 March |

**Price - 8/-**

யாழ். இலக்கியவட்ட வெளியீடு — 31.


1. **வெள்ளோட்டம்** பக்கம் 1

(இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபன 'வாலிபவட்டம்' நிகழ்ச்சியில் தொடர் நாடகமாக ஒலித்தது)

2. **கரைசேரும் கட்டுமரங்கள்** பக்கம் 45

(1985 ஆம் ஆண்டு யாழ். இலக்கியவட்டம் 'ஈழநாட்' டுடன் இணைந்து நடத்திய இரசிகமணி கனக செந்திநாதன் குறுநாவல் போட்டியில் பாராட்டுப்பரிசு பெற்றது. 'ஈழநாடு' வாரமலரில் வெளியாகியது)


# பதிப்புரை

மரபுவழிநின்று புத்திலக்கியம் படைக்கும் தூய நோக்கத்துடன் நிறுவப்பட்ட யாழ். இலக்கிய வட்டம், இருபது ஆண்டுகளுக்குமேலாக இலக்கிய சேவை செய்து வருவதைத் தமிழுலகம் நன்கு அறியும், இலக்கியத்தரம்மிக்க நூல்களை வெளியிட்டும் அறிமுகப்படுத்தியும் எழுத்தாளர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்துவருகிறது.

ஈழத்து இலக்கிய வரலாற்றில் மறுமலர்ச்சிக் குழுவிற்குத் தனியிடமுண்டு. அவ்வியக்கத்தின் உறுப்பினராகச் செயலாற்றிய பண்டிதர் ச. பஞ்சாட்சரசர்மா அவர்களின் தநயன் கோப்பாய் - சிவம் எழுதிய **வெள்ளோட்டம்** என்ற குறுநாவல் தொகுதியினை வெளியிடுவதில் யாழ். இலக்கிய வட்டம் பெருமிதம் கொள்கிறது.

இவர் ஏற்கெனவே, **நியாயமான போராட்டங்கள், இலங்கையில் தமிழ்ப்பத்திரிகைகள் சஞ்சிகைகள், அன்னை பராசக்தி, சைவநற்சிந்தனை, 'கனவுப் பூக்கள்'** ஆகிய நூல்களினை வெளியிட்டுள்ளார்.

புதிய தலைமுறை எழுத்தாளரான 'கோப்பாய் - சிவம்' பலதுறைகளிலும் எழுதிவருபவர். நாடறிந்த எழுத்தாளர் பழகுவதற்கு இனியவர்.

இவரது கதைகளில் தெளிவுண்டு. நல்ல கருத்துண்டு. சிந்தையைத் தூண்டும் ஆற்றலுண்டு.


இரு தசாப்தங்களாக எமது வெளியீடுகளுக்கு ஆதரவு நல்கும் இலக்கிய ஆர்வலர்கள் மத்தியில் யாழ். இலக்கியவட்டத்தின் வெளியீடாக இந்நூலை வெளியிட்டுவைப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

வணக்கம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
24-3-1986.

**யாழ்வாணன்.**
இணைச்செயலாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



" ஈழத்துத் தமிழிலக்கியத்தின் இன்றைய ஆரோக்கியமான போக்கிற்கு இளந்தலைமுறையினர் கணிசமான அளவு பங்கினைச் செலுத்திவருகின்றனர் என்ற மெய்ம்மையின் அடிப்படையில் நோக்கும் போது அவர்களுள் முதன்மை வகிக்கின்ற ஒருவராக 'கோப்பாய் - சிவம்' விளங்குவதைக் காணலாம் "

— செங்கை ஆழியான்.
('நியாயமான போராட்டங்கள்' முன்னுரையில்)

" பழைமையில் ஊறித்திளைத்த பண்டிதரின் மகன் கோப்பாய்-சிவம். தந்தை பழைய இலக்கியத்தின் பிரதி நிதியாக இருப்பதைப்போல மகன் நவீன இலக்கியத்தின் வாரிசாகத் திகழ்கிருர். கோப்பாய் சிவத்தின் கதைகளில் மனிதாபிமானம் மேலோங்கி நிற்கிறது "

— அந்தனி ஜீவா.
(தினகரன் 19-1-1986)

" மௌனி, ஜெயகாந்தன் ஆகியோரின் உத்திமுறை சிவத்திற்கு நன்கு கைவந்திருக்கிறது...... "

— சோனு
(ஈழநாடு 15-9-85)

" சாதிப்பிரச்சினைகளை வைத்துப் படைக்கப்பட்ட எத்தனையோ கதைகளைப் படித்தவர்கள் நிச்சயம் ஒரு முற்றிலும் வித்தியாசமான முறையில் படைக்கப்பட்டுள்ள கோப்பாய் - சிவத்தின் கதைகளைப் படித்து வியந்துபோவார்கள் "

— எஸ். எஸ் அச்சுதன்பிள்ளை.
(வீரகேசரி 11-8-85)

கோப்பாய் சிவத்தின் கதைகள் யாவற்றிலுமே மனிதாபிமான உணர்வு இழையோடியிருக்கும். அவரதுபார்வை விசாலமானது, ஆழமானது, கலைத்துவம் மிக்கதும் கூட,

— எஸ். வன்னியகுலம்
(மல்லிகை, நவம்பர் 1985)

# வெள்ளோட்டம்

## 1

"சின்னஞ் சிறு பெண் போலே
சிற்றுடை இடையுடுத்தி
சிவகங்கைக் குளத்தருகே
ஸ்ரீ துர்க்கை சிரித்திருப்பாள்"

அதிகாலைப் பனி மெல்ல விலகிக் கொண்டிருக்க அதனை விரட்டிக் கொண்டே ஆதவனின் பொற்கிரணங்கள் வீச ஆரம்பித்தன. அன்னையின் ஆலய மணியோசை கேட்டு அந்தப் பாரிய ஆலமரத்திலிருந்து பறவையினங்கள் சட சட வென இறக்கைகளை அடித்துக் கொண்டு எழுந்து பறந்தன. சலசலப்புற்ற ஆலமிலைகளிலிருந்து பனித்துளிகள் கீழே சிந்தின. இடையிடையே பழுத்த சில ஆலம் பழங்களும் ஆங்காங்கே விழுந்து சிதறின.

ஆலமரத்தின் கிளைகளில் தொங்கும் விழுதுகளிலிருந்து பனி நீர் சொட்டுவது போல, காலைப்பனி நீரில் குளித்து விட்டு வந்த கருங் கூந்தலிலிருந்து சொட்டுச் சொட்டாக நீர்த்துளிகள் வழிந்து கொண்டிருக்க கோபுர வாசலினைத் தாண்டி உள்ளே நுழைந்தாள் யாழினி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணியை அடித்துக்கொண்டிருந்த ஆனந்தையர் அவளைத் திரும்பிப் பார்த்துக் கனிவான ஒரு புன்னகையை வீசிவிட்டு மறுபடியும் ஆலயத்துள் நுழைந்தார். அந்தப் புன்னகையில் அவள் கோயில் எசமானின் மகள் என்பதால் ஏற்பட்ட ஒரு மரியாதையும் அவளது தந்தையின் ஸ்தானத்தில் இருக்கக் கூடிய வயதின் காரணமான பாசம் கலந்த ஒரு கருணையும் அவளுடைய இயல்பான அந்த தெய்வீகத் தோற்றத்தினால் ஏற்பட்ட ஒரு பக்தியும் கூடக் கலந்திருந்தன.

உதய காலப் பூஜைக்கான சகல ஆயத்தங்களும் உள்ளே ஏற்கனவே செய்யப் பட்டிருந்தன. பலமுகங்களிலும் ஏற்றி வைக்கப்பட்டிருந்த தீப ஒளியில் ஜரிகைப் பட்டாடை ஜொலிக்க முத்துமாரி அம்மன் கருவறையுள் சிரித்துக் கொண்டிருந்தாள்.

சாமகானப் பிரியையான அந்த சர்வலோக நாயகியை நோக்கி அன்புருகப்பாடி "வாமதேவர் மகிழ் சுந்தரி சௌந்தரி ஸ்யாமளாங்கி ஆனந்தபைரவி......" என்று தனக்குப் பிடித்த ஆனந்தபைரவி ராகப்பாடலால் அவளைத் துதித்து பூஜை தரிசித்துக் கொண்டு பிரசாதத்தையும் பெற்றுக் கொண்டு புறப் பட்டாள் யாழினி.

அன்று செவ்வாய்க்கிழமை. ஒவ்வொரு செவ்வாய்க்கிழமை யும் உதயகாலப் பூஜைக்கு வந்து வணங்கிச் செல்வது அவள் வழக்கம். அவள் கோபுரவாசலை அடையும்போது அவள் தந்தை மாணிக்கவாசகர் அங்கு வந்து கொண்டிருந்தார். கோயில் எச மான், ஊரில் பெரிய பணக்காரர், கௌரவமான குடும்பத்தவர் என்ற விஷயங்களைப் பறைசாற்றக்கூடிய தோற்றம். வாட்டசாட் டமான வண்டி தொந்தியுடன் கூடிய செக்கச் சிவந்த உடல மைப்பு. தலையில் சில வெண்மயிர்கள் தலைகாட்ட ஆரம்பித் திருந்தன. கழுத்திலே ஒரு தங்கச் சங்கிலி அட்சரக் கூட்டு டன் தொங்கியது. கையிலே மோதிரங்கள் டாலடித்தன. ஆனால் இத்தனைக்கும் மேலாக -படித்தவர் -பண்பானவர் -அன்பானவர் என்பவற்றுக்குரிய அமைதியான - சாந்தம் தவழும் முகம். பரந்த நெற்றியில் பளிச்சிடும் விபூதிப் பூச்சு.



கோபுர வாசலில் நின்றபடியே சந்நிதானத்தை நோக்கிக் கரம் குவித்து வணங்கிவிட்டு மகளிடம் இருந்த விபூதி பிரசா தங்களை வாங்கி அணிந்துவிட்டு ஒரு பூவையும் கண்களில் ஒற்றிக்காதில் செருகிக்கொண்டார். மாரி அம்மனின் பாதகம லங்களிலிருந்து தனது கரகமலங்களிற்குக் கிட்டியிருந்த ஒற்றை ரோஜாவை நீர் சொட்டும் கரும் கூந்தலில் செருகிக் கொண்டு தந்தையைத் தொடர்ந்தாள் யாழினி. கோபுரவாசலோடு ஒட்டி ஈசான மூலையில் அந்தப் பெரிய ஆலமரத்திற்கும், மணிக்கோ புரத்திற்கும் அருகில் போடப்பட்டிருந்த அந்தத் தற்காலிக மான ஓலைக்கொட்டகையை நோக்கி நடந்தார் மாணிக்கவாசகர்.

ஆனந்த ஐயர் கதவைப் பூட்டிக்கொண்டு வெளியேவந்தார். அவருக்குத் தலைசாய்த்து மரியாதை செலுத்தி விட்டுத் தன்கை யைத் திருப்பி சரியான நேரம் பூஜை நடந்திருக்கிறதா என்பதை யும் பார்த்துக்கொண்டார். ஓலைக் கொட்டகைக்குள் தந்தை யும் மகளும் நுழைந்தபோது கந்தசாமி ஆசாரியாரும் அவர் மகன் சாரங்கனும் ஆயுதங்களை எடுத்து வேலைக்கான ஆயத் தங்களில் ஈடுபட்டிருந்தனர். மற்ற ஆசாரிமார்களும் உதவியா ளர்களும் இன்னும் வந்து சேரவில்லை. இவர்கள் நேரத்திற்கே வந்து விட்டதில் எசமானுக்குத் திருப்தி.

மாரி அம்மன் கோவிலிற்கு ஒருதேர் இல்லாத குறையை நீக்கி விடவேண்டுமென்று அவ்வூர்மக்கள் எல்லாருமாகச் சேர்ந்து சில வாரங்களுக்கு முன்னர்தான் தீர்மானித்தனர். அதன்படி புதிய சித்திரத் தேர்வேலைகள் உடனேயே ஆரம்பிக் கப்பட்டு விட்டன. அதிகாலை உதயப் பூஜை மணி ஒலிக்கும் போதே ஆரம்பமாகும் உளிகள் வாள்கள் சுத்தியல்கள் இவற் றின் ஓசைகள் சிலவேளைகளில் இரவு அர்த்த ஜாமப் பூஜை மணி ஒலிக்கும்வரைகூடத் தொடர்ந்து ஒலிப்பதுண்டு. அத்தனை துரி தமாகத் தேர் வேலைகள் நடந்து கொண்டிருந்தன. கந்தசாமி ஆசாரியார்தான் பிரதான ஆசாரியாராக அந்த வேலையைப் பொறுப் பேற்றிருந்தார். ஒரு வருடத்திற்குள் வேலையை முடித்து விடலாம் என்பது அவர்கள் திட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலைத்திட்டங்கள் பற்றிக் கந்தசாமியுடன் மாணிக்கவாசக பேசிக்கொண்டிருக்கும் போது அருகிலிருந்த பட்டறையில் அர்ச்சனைத் தட்டை வைத்துவிட்டு அங்கே நடந்திருந்த கலையம்சம் மிகுந்த வேலைப்பாடுகளை ஆர்வத்துடன் நோட்டமிட்டாள் யாழினி. வெறும் மரக்கட்டைகள் சிற்பங்களாக அழகுருக் கொள்வதும் அவை ஒன்று சேர்ந்து தேராகுவதும் அவளுக்குப் பிரமிப்பாக இருந்தது. நாள் பூராவும் அங்கேயே இருந்து ஒவ்வொரு அங்குலமாக அந்தக்கலையாக்கத்தை இரசிக்க வேண்டுமென்று அவளுக்குத் தோன்றியது.

"அம்மா நான் இதிலை விபூதி பூசலாமோ?" என்ற குரல் கேட்டுத் திரும்பினாள் அவள். கந்தசாமி ஆசாரியின் மகன் சாரங்கன் அர்ச்சனைத் தட்டின் அருகில் நின்று கொண்டிருந்தான். அப்போது தான் முகம் கழுவிவிட்டுத் துவாயினால் முகத்தைத் துவட்டியபடி அவன் நின்றுகொண்டிருந்தான். அவள் வெறுமனே தலையாட்டினாள். அவன் தன்னை அம்மா என்று அழைத்தது அவளுக்கு ஒரு திகைப்பை ஏற்படுத்தியது. தான் ஒரு தொழிலாளி என்பதாலும் தன் எசமானரின் மகள் அவள் என்பதாலும் ஏற்பட்டமரியாதை காரணமாக மட்டுமல்லாமல் பொதுவாகவே பெண்களை 'அம்மா' என்று அழைக்கின்ற தன் வழக்கம் காரணமாகவும் அவன் அப்படி அழைத்திருந்தான்.

ஆனால் அவள் அப்படி நினைக்கவில்லை. அவன் வயதால் தன்னை விட சற்று மூத்தவன். கட்டுமஸ்தான- சிவந்த- உயர்ந்த அவனது அழகிய தோற்றமும் கருகருவென்று அடர்ந்து வளர்ந்த மீசையும் கலைஞனுக்கேயுரிய குறுகுறுத்த பெரிய விழிகளையும் பார்த்தபோது அவனுக்குத் தான் மரியாதை செலுத்த வேண்டும் என்று அவளுக்குத் தோன்றியது. அவனை அவள் வியப்புடன் பார்த்துக்கொண்டிருக்கும் போதே அவன் விபூதியை எடுத்துப் பூசிக்கொண்டு தட்டிலிருந்த ஒருபூவை எடுத்து அருகில் கிடுகுத்தட்டில் கொளுவப்பட்டிருந்த அம்மன் படத்திற்கு வைத்துவிட்டு வணங்கினான். அதில் ஏற்கனவே செருகப்பட்டு வாடியிருந்த பழைய பூவைக் கண்ட யாழினி தினசரி அவன் இந்தப் பிரார்த்தனையை முடித்துவிட்டே தன் வேலைகளை ஆரம்பிக்கிறான் என்பதைத் தெரிந்து கொண்டாள்.



அவன் உளியையும் சுத்தியலையும் தொட்டுக் கண்ணில் ஒற்றிக்கொண்டு திரும்பினான். அவ்வளவு நேரமும் தன்னையே பார்த்துக்கொண்டிருந்த யாழினியைக் கண்டதும் அவன் சற்றே வியப்படைந்ததோடு நாணமும் அடைந்தான். ஒரேகணம் அவளை நோக்கி நிமிர்ந்து பார்த்துவிட்டு வேலைகளை அவன் ஆரம்பித்தான் கொடிபோல் மெலிந்து உயர்ந்த சிவந்த உடலை மயில் நீலக்கரை போட்ட செம்மஞ்சள் வண்ண நைலெக்ஸ் சேலை இறுக அணைத்திருக்க-அதே மயில் நீலவண்ண பிளவுஸ் அவள் செந்நிற மேனியின் வனப்பை வெளிக்காட்ட அவள் நின்றிருந்தாள். நீலநிறப் பொட்டின்மேல் அம்பாள் பிரசாதமான சென்னிறக் குங்குமம் ஜொலித்தது. மஞ்சள் குளித்த முகம் வெயிலில் மினுமினுத்தது. அலைஅலையாய் நெளிந்த கருங்கூந்தலில் அந்தவெண்ணிற ஒற்றை ரோஜா நீல வான்பரப்பில் வெண்மதிபோல் பிரகாசித்தது. அகன்ற கருவிழிகளால் அவள் ஆவலோடு தன்செயல்களைக் கவனிக்கின்றாள் என்ற எண்ணம் அவன் உள்ளத்தில் ஒரு குறுகுறுப்பை ஏற்படுத்தியது. துரிதமாகத் தன் கரங்களை இயக்கினான் அவன்.

அப்போது சைக்கிள் மணி ஓசை கேட்டு அவர்கள் திரும்பியபோது கொட்டகை வாசலில் முருகானந்தம் மாஸ்டர் நின்றுகொண்டிருந்தார். "அப்பா, மாஸ்டர் வந்திட்டார். நான் போறன்" என்று தந்தையிடம் சொல்லிவிட்டு அர்ச்சனைத் தட்டையும் எடுத்துக்கொண்டு விரைந்தாள் அவள். அவளைத் தொடர்ந்து மாணிக்கவாசகரும் புறப்பட்டார். அவர்களுடன் சைக்கிளை உருட்டியவாறே நடந்துகொண்டு,

"என்ன இலக்கிய பாடத்தை விட்டிட்டுச் சிற்பக்கலை படிக்கிற எண்ணம் போலை இருக்கு" என்று மாஸ்டர் கேட்டபோது மாணிக்கவாசகர் நேரத்தைப் பார்த்தார். வழக்கமாக எழரை மணிக்கு மாஸ்டர் வந்து பாடம் ஆரம்பிப்பார். இன்று பூஜை முடிந்ததும் தேர்க்கொட்டகையில் தாமதித்ததால் நேரம்போய் விட்டது. அவர்கள் கோயிலின் வடக்குப்புறமாக இருந்த சிறிய வீதியில் இறங்கி நடந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2

## " குலதெய்வமே உன்னைக் கொண்டாடினேன்",

கிழக்குநோக்கி அமைந்த அந்த ஆலயத்தின் தென்புறம் முழுவதும் நெல்வயல்களும், கிழக்கே அன்னையின் முகதரிச னத்தைப் பெற்றவாறு சில தோட்டங்களும இரண்டொரு குடிமனையும் இருந்தன. வடக்குப்புறமாக பிரதான வீதியிலி ருந்து வருகின்ற சிறிய பாதை கோயில் மதிலை அணைத்துக் கொண்டு தோட்டங்களை நோக்கிச் சென்றது. கோயிலுக்கு வடகிழக்கு மூலையில் இருந்து ஆனந்த ஐயரின் வீட்டைத் தாண்டி அதற்கு அடுத்ததாக - மேற்குப்புறத்தில் சில யார் தூரம் தள்ளி அழகிய சுற்றுமதிலினுள் அமைந்த " அம்மன் அருள்" என்ற அழகிய சிறிய வீடுதான் மாணிக்கவாசகருக் குரியது.

"அம்மன் அருள்" என்ற அந்தப் பெயர் அவருடைய வீட்டிற்கு மிகவும் பொருத்தமானதுதான். வீட்டிற்குமட்டு மல்ல அவருடைய அந்த வாழ்க்கையின் சிறப்புகளுக்கெல்லாமே அந்த மாரி அம்மனின் அருள்தான் காரணமென்று கூறுவார் அவர். அவருடைய பாட்டனருக்கு முந்திய பரம்பரையின ரெல்லாரும் பெரிய பணக்காரர்களாக வசதியோடு வாழ்ந்து வந்தவர்கள். பாட்டனர் காலத்தில் ஆரம்பித்து அவரது தந்தை யார் காலத்தைக் கடந்து மாணிக்கவாசகரின் இளமைப் பருவம் வரைகஷ்டகாலம் பிடித்துக்கொண்டது. தொடர்ந்து வறுமை யிலும் கஷ்டத்திலும் உழன்றனர்.

மாணிக்கவாசகரின் பாட்டனர் செல்வநாயக முதலியார் தான் மாரியம்மன் கோயிலின் காரணகர்த்தா. அவர்தனது கடைசிக்காலத்தில் அந்த இடத்தில் ஏதோ ஒரு மகத்துவம்



இருப்பதை உணர்ந்தார். வெறும் கற்றுளைப் புதர்களும் சிறு பற்றைகளும் நிறைந்திருந்த அந்த இடத்தில் ஒரு தனிப் பாறாங் கல்லும் அதற்கருகே மெல்ல முளைவிட்டு வரும் சிறிய ஆலங் கன்று ஒன்றையும் கண்ட முதலியார் அந்த இடத்தைப் புனி தமாகக் கருதினர். அந்தக் கற்பாறையிலே கற்பூரம் கொழுத்தி வருவதை வழக்கமாக்கினர். அங்கே சிறு கொட்டிலொன்றை அமைத்து துப்புரவு செய்து கோயிலாக்கினர்.

ஊர்ச்சனங்களும் இடையிடையே வந்து வணங்கிப் பொங் கலும் பொங்கினர். மாணிக்கவாசகரின் தந்தையார் கனகரத்தி னமும் பல்காலம் அந்தக்கோயிலைக் கவனிக்காதிருந்துவிட்டுத் தனது பிற்காலத்திலேதான் அவ்விடத்திலே கல்லாலமைந்த சிறு கோயிலைக் கட்டி ஆனந்த ஐயரின் தகப்பனைக் கொண்டு முத்துமாரி அம்மன் விக்கிரகமொன்றைப் பிரதிஷ்டை செய்வித் துத் தினசரி பூஜைக்கு ஏற்பாடு செய்தார்.

கனகரத்தினம் இறக்கும் தறுவாயில் மகனை வேண்டிக் கொண்ட ஒரே விஷயம் கோயில் பற்றியதுதான் "மாரிஅம்மன் கோயிலைக் கைவிட்டுவிடாதே" என்ற வசனத்தோடு அவர் போய் விட்டார். மாணிக்கவாசகரின் இளமைக்காலம் ஒழுங்காக இல்லை. ஏதேதோ வியாபாரங்களும் - கடத்தல் முயற்சிகளும் செய்து நொடித்துப் போய் விட்டதுடன் கடுமையான நோயி லும் விழுந்துவிட்டார். அந்தவேளையில் - முப்பத்தைந்து வயதுக் குப் பிறகுதான் அவருக்குத் தந்தையின் இறுதி வார்த்தைகள் நினைவுக்கு வந்தன. அதற்குப் பிறகு அம்மனுக்கு அவரது தொண்டுகிடைத்தது. அவருக்கு அம்மன் அருள் கிடைத்தது. நல்ல முறையில் வியாபாரம் செழித்தது. நல்ல பெயரையும் பெற்றுக் கோயிலையும் வளம்படுத்தினர். புதிதாக யாராவது கோயில் பக்கம் கண்டால் உடனே அவர்களை அந்த ஆலமரத் தின்கீழ் அழைத்துப் போய் அமர்த்திவிடுவார். தனது பழைய கதை எல்லாம் கூறி " அம்மன் அருள் " என்று முடிப்பார். அன்னையின் அற்புதங்கள் பலவற்றையும் விபரிப்பார். பொது வாகவே அந்த ஆலயத்திற்கு ஒரு முறை வருகிறவர்களை மீண் டும் மீண்டும் வரவழைக்கின்ற ஏதோ ஒரு ஆகர்ஷண சக்தி இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகானந்தம் மாஸ்டர் இவர்களுக்கு அறிமுகமானது கூட இப்படித்தான். ஒருமுறை அந்த ஆலயத்தில் ஏதோ ஒரு விசேஷ நிகழ்ச்சியின் போது முருகானந்தத்தின் நண்பனும் அபிமான கவிஞருமான தவத்தின் கவியரங்கு இடம்பெற்றிருந்தது. அதனால் அவர் அங்கு வந்திருந்தார். கவியரங்கு முடிந்த பின்பு தவமும் முருகானந்தமும் அந்த ஆலமரத்தடியில் அமர்ந்து பேசிக்கொண்டிருந்த போது மாணிக்கவாசகர் வழக்கம் போல இவர்களிடம் ஆலய வரலாற்றை அவிழ்த்து விட்டார். அதன் பிறகு அவ்வப்போது இருவரும் ஆலயத்திற்கு வருவதும் அப்படியே மாணிக்கவாசகர் வீட்டிற்குப் போய்க் கதைத்துக் கொண்டிருப்பதும் வழக்கமாகி விட்டது.

முருகானந்தம் பட்டப்படிப்பை முடித்து விட்டு வேலை இல்லாததால் டியூஷன் மாஸ்டராக இருப்பதை அறிந்த மாணிக்கவாசகர் அவரைத் தன் பிள்ளைகளுக்கு டியூஷன் சொல்லிக் கொடுக்க ஏற்பாடும் செய்து விட்டார். சென்ற மாதம் முதல் வகுப்புக்கள் ஒழுங்காக நடக்கின்றன.

மாணிக்கவாசகரின் மூத்த மகள் யாழினி வெளிவாரியாகப் பட்டப்படிப்புப் படிக்கிறாள் பொதுவாக எல்லாப் பாடங்களிலும் "கோச் அப்" தேவைப்பட்டாலும் முக்கியமாகத் தமிழ்இலக்கியத்தில் தான் தனிக்கவனம் எடுத்துப் படிக்கத் தேவைப்பட்டது, இரண்டாவது மகள் பத்மினி உயர்தர வகுப்பில் படிக்கிறாள். எனவே இவரது 'கோச்-அப்' அவளுக்கும் பெரிதும் உதவியது. பெரும்பாலும் இருவருக்குமே சேர்த்தும் சிலவேளைகளில் தனித்தனியேயும் பாடம் சொல்லிக் கொடுப்பார்.

இவர்கள் வீட்டிற்குள் நுழையும்போது பத்மினி பாடத்துக்குத் தயாராக இருந்தாள். "குட்மோணிங்" என்ற அவளது வணக்கத்திற்கு வேண்டுமென்றே "வணக்கம்" என்று தமிழில் பதில் மரியாதை செலுத்திவிட்டு அமர்ந்தார் முருகானந்தம். அவள் முகத்தை 'உம்' என்று வைத்துக்கொள்ள, மாணிக்கவாசகர் இதைப்பார்த்துச் சிரித்தபடியே உள்ளேசென்றார். யாழினியும் உடைமாற்றிவிட்டு வருவதற்காக உள்ளேசென்றாள். முருகானந்தம் புத்தகத்தைப் புரட்டியபடி இருக்க பத்மினி அவனையே பார்த்தபடி இருந்தாள்,



# 3

## "யாரோ இவர் யாரோ - என்ன பேரோ - அறியேனே"

அடுத்த செவ்வாய்க்கிழமை யாழினி கோயிலில் பூஜை முடிந்ததும் திரும்பியவள் தேர்க்கொட்டகைக்குள் நுழைந்தாள். வேலைகள் மும்முரமாக நடந்துகொண்டிருந்தன. சாரங்கன் ஏதோ ஒரு நுட்பமான சிற்பமொன்றைச் செதுக்கிக்கொண்டிருந்தான். அவள் அருகில் நின்று அதைக் கவனித்துக்கொண்டிருந்தாள். சாரங்கன் அவளை நிமிர்ந்து பார்த்து ஒரு புன்னகையை வீசிவிட்டு மீண்டும் வேலையில் மூழ்கினான். கொட்டகையின் ஒரு மூலையில் ஒரு மரக்குற்றியில் வைக்கப்பட்டிருந்த ஒரு புத்தகம் இவள் கண்களில் பட்டது. இங்கிருந்தபடியே அது ஜெயகாந்தனின் "ஊருக்கு நூறுபேர்" என்ற நாவல் என்பதைக் கவனித்தவள் சாரங்கனிடம் மெல்ல விசாரித்தாள்.

"அந்த......அதிலை இருக்கிற புத்தகம் ஆருடையது?"

"அது லைபிறரிப் புத்தகம் நான்தான் எடுத்தந்தனான். படிச்சிட்டன்- இன்டைக்குப் பின்னேரம் வேலை முடிஞ்சு போகேக்கை குடுக்கவெண்டு கொண்டந்தனான்......."

"ஐஸி........ அதை ஒருக்கா எனக்குத் தருவியளே?........ நான் படிச்சிட்டுத்தாறன் ......."

"ஓ! இன்னும் ரண்டு நாளிலை 'டேற்' முடியுது அதுக்கிடையிலை பாத்திட்டுத் தாங்கோவன்........" என்று சொல்லிக்கொண்டு அதை எடுக்க எழுந்தான். அதற்கிடையில் அவளே அங்கு போய் எடுக்கும்போது அதனோடு இன்னொரு புத்தகமும் இருப்பதைக் கண்டு அதிசயித்தாள். கி. லக்ஷ்மணன் எழுதிய 'இந்திய

தத்துவ ஞானம்' என்கிற அந்தக் கனமான புத்தகத்தைப் புரட்டிக்கொண்டே "இந்தப் புத்தகங்களைக்கூட நீங்கள் படிக்கிறதுண்டா?" என்று வினவினாள் "ஏன் படிக்கக்கூடாதா? பட்டப்படிப்பு படிக்கிறாக்கள் மட்டும்தான் படிக்கலாமோ?" என்று அவன் சிரித்துக்கொண்டே கேட்டபோது யாழினி கல கலவென்று சிரித்துக்கொண்டே,

"இல்லை இல்லை........ நாங்கள் சோதனைக்காகப் படிக்க வேணுமே எண்டு சகிச்சுக்கொண்டு படிக்கிறம். இந்தத் தத்துவங்களையெல்லாம் நீங்கள் கதைப்புத்தகம் மாதிரிப்படிக்கிறியளோ எண்டுதான் கேட்டனான்........" என்றாள். தான் கேட்ட விதம் அவன் மனதைப் புண்படுத்தியிருக்குமோ "சாதாரண சிற்பாசாரியாகிய நீ இந்தப் பெரிய புத்தகமெல்லாம் படிக்கிறியா?" என்ற தொனியில் கேட்டுவிட்டதாக அவன் நினைத்துவிடக் கூடாது என்ற நினைவுடன் - மன்னிப்புக் கேட்கின்ற பாவனையில் அவசரமாக அவள் இவ்விதம் சொன்னபோது,

"நீங்கள் இந்தப்புத்தகம் படிச்சிருக்கமாட்டியள் எண்டு நினைக்கிறன். இதிலை தத்துவ ஞானங்கள் எல்லாம் நல்ல இலகுவான முறையிலை - சுலபமாய் விளங்கக்கூடியதாய்த்தான் எழுதியிருக்கிறார். கே. எம். பி. மஹாதேவன் எழுதின புத்தகம் கொஞ்சம் கடினம். அதை நான் இன்னொருமுறை படிக்க வேணும்........"

"அப்படியா, அப்ப நல்லதாய்ப் போச்சு, என்னட்டை மஹாதேவன்ரை புத்தகம் இருக்கு. நாளைக்கு நீங்கள் இந்தப் புத்தகம் வாங்க வரேக்கை நான் அதைத்தாறன்........"

இவர்களின் உரையாடலைக் கேட்டுக்கொண்டே வேலையில் கவனமாயிருந்த கந்தசாமி ஆசாரியார், எழுந்து சென்று வெற்றிலைச் சாற்றைத் துப்பிவிட்டு "தங்கைச்சி, உவன் பள்ளிக்கூடத்திலை ஏ. எல். வரையும் படிச்சுப் பாஸ்பண்ணிப் போட்டான். பேந்து வாசிற்றிக்கும் போப்போறனெண்டு நிண்டவன். நான் தான் தடுத்து எங்கடை தொழிலைப் பழகட்டுமெண்டு விட்டிட்டன். வேலை நேரம் முடிஞ்சால் உப்பிடித்தான் புத்தகமும் எழுத்தும் - சங்கங்கள் - கூட்டங்கள் எண்டும் திரிவான்...." என்று மகனின் பெருமைகளை எடுத்துரைத்தார்.



தன் மகனைப் பற்றி அந்தத்தந்தை கூறும் போது அவருக்கு ஏற்படும் பெருமிதத்தையும் - அதேநேரம் அதைக்கேட்கும் போது மௌனமாக - அமைதியாகக் குனிந்து தன் வேலையில் கவனமாக இருந்த சாரங்கனின் முகத்திலும் அதே பெருமிதமான ஒளிவீச்சையும் அவள் அவதானித்தாள். அதேநேரம் தன் மேற்படிப்பை இவர் தடுத்துவிட்டாரே என்ற கோபமோ - கவலையோ இல்லாமல் அவன் நடந்து கொண்டமுறையும் இவளுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. அதற்கு விடைகொடுப்பவன் போல அவனே பேசினான்,

"படிப்பை நிறுத்தின உடனே முதலில் எனக்கு வருத்தமாயும் கோபமாயும் கூட இருந்தது, பிறகு என்னுடைய கல்வியறிவையும் கைத்திறனையும் பயன்படுத்தி இந்தக் கலைத்தொழிலிலை ஈடுபட்ட பொழுது எனக்கு மகிழ்ச்சியாயும் திருப்தியாயும் இருந்தது. இப்பகூட நான் பெருமைப்படுகிறன். இப்ப உத்தியோகத்தைத் தேடி எங்கடை ஆட்கள் எல்லாரும் போயிடுறதாலை இந்தக்கலையை வளர்க்க ஆக்களில்லை. இது ஒரு குலத்தொழிலாய் இருக்கிறதாலை வேறை சாதி ஆக்களும் இதிலை ஈடுபடமாட்டினம். இந்த நிலையிலை எங்கடை நாட்டிலை இந்த அருமையான சிற்பக்கலையை வளர்க்கிறதுக்கு வலு கொஞ்சப் பேர் தான் இருக்கினம். எங்கடை பண்பாடுகள் கலாச்சாரங்களை அடுத்த தலைமுறைக்குக் கொண்டுபோற ஒரு பாலமாய் நாங்கள் இருக்கிறம்" என்று நெஞ்சை நிமிர்த்தி அவன் சொன்ன போது அவனுடைய அந்த அபாரமான நம்பிக்கையும். தொழிலில் உள்ள ஆர்வமிக்க விசுவாசத்தையும் உணர்ந்து போற்றிய படி புறப்பட்டாள் யாழினி. அப்போது அவனுடைய அந்த அம்மன் படத்தில் அன்றுகாலை செருகப்பட்டிருந்த செவ்வரத்தம் பூவினருகில், தன் அர்ச்சனைத் தட்டிலிருந்த வெள்ளை ரோஜாவையும் சொருகிவிட்டு இரண்டு புத்தகங்களையும் எடுத்துக் கொண்டு வீட்டை நோக்கி நடந்தாள்.

வீட்டில் முருகானந்தம் மாஸ்டரும் மாணிக்கவாசகரும் அரசியல் பற்றிய விவாதத்தில் ஈடுபட்டிருந்தனர். புத்தகங்களை மேசையில் வைத்துவிட்டு அவசரமாக உள்ளே நுழைந்த யாழினி உடை மாற்றி விட்டுப் படிக்க உட்கார்ந்த போது இந்திய தத்துவ ஞானத்தைப் புரட்டிக்கொடிண்ருந்தார் மாணிக்கவாசகர். ஊருக்கு நூறுபேர் முருகானந்தனின்கையில் இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4

''சுந்தரவதனி சுகுண மனோகரி
மந்தஹாச முக மதிவதனி ''

"ஜெயகாந்தனின் புதிய போக்கைப் பற்றி, அதாவது இப்ப கொஞ்சக் காலமாய் அவரிலை ஏற்பட்டிருக்கிற மாற்றங்களைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறியள் முருகானந்தம்." கையிலே தேநீர்த்தம்ளரை எடுத்துக்கொண்டு முருகானந்தத்தைப் பார்த்துக் கேட்டார் மாணிக்கவாசகர். அவர் சொல்லப்போகிற பதிலை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டு அருகில் இன்னொரு கதிரையில் அமர்ந்திருந்தாள் யாழினி. இவர்களிடம் தேநீரைக் கொடுத்துவிட்டு மற்றொரு கதிரையில் அமர்ந்தாள் பத்மினி.

"என்ன? பத்திரிகை நிருபர் பேட்டி காணிற மாதிரி முருகானந்தத்தைத் திறணடிக்கிறியள்'' என்று கேட்டுக்கொண்டே அப்போது வாசலில் வந்து நுழைந்தான் தவம்.

"ஓ! நம்ம கவிஞரும் வந்தாச்சு. நல்லது தான் வாரும் வாரும்'' என்று அவனை வரவேற்றார் வாசகர்.

"நான் ஆனந்தனைத் தேடிப் போனனன். வீட்டைசொல்லிச்சினம் ஆள் இங்கை எண்டு. உடனை வந்திட்டன். இஞ்சை பெரிய கலந்துரையாடலொண்டு நடக்குது போலை" என்று தவம் சொல்லிக் கொண்டிருக்கையில் பத்மினி உள்ளே போய் இன்னொரு தம்ளரில் தேநீர்கொண்டு வந்து அவனிடம் கொடுத்தாள். "நன்றி'' என்று சொல்லிக் கொண்டே பள பளக்கும் அந்த எவர் சில்வர் தம்ளரைத் தூக்கிப் பார்த்தபடி,

"இந்தத்தம்ளரிலை தேநீர் குடிக்கிறதுக்காக இஞ்சை எத்தனை தரமும் வரலாம்" என்று சொன்னான் தவம்.



''அப்ப, டீ மாத்திரம் நல்லதில்லை எண்டு கருத்தோ?" என்று பத்மினி பொய்க் கோபத்துடன் கேட்டதை அவசரமாக மறுத்தான் தவம்.

"இல்லை, இல்லை. நீங்க போடிற டீயைப்பற்றி எனக்கு நல்ல திருப்தி. நான்சொல்ல வந்தது இப்பெல்லாம் எந்த வீட்டிலை போனாலும், கப் அன் சோசர் தான் வரும். இப்பிடியான தம்ளர்களைக் காணவேமுடியாது. நம்முடைய பண்பாடு மறைஞ்சு போய் ஆங்கிலேயரைப் போலை உறிஞ்சி உறிஞ்சிக் குடிக்கிற பணபாடு எல்லா இடத்திலையும் வந்திட்டுது எண்டதைத் தான் நான சொல்ல வந்தனான்''

தம்முடைய வீட்டின் பண்பாட்டையும் தமிழ் வழக்கத்தையும அவர் பாராட்டிய மகிழ்ச்சியோடு வாசகத்தார் புன்னகைபூத்தார்.

"நானும் இந்த விஷயத்தில் உங்களைப் போலத்தான் நினைக்கிறன். சில வீடுகளுக்குப் போனால் தேநீர் வருமுன்னர் நான் அவசரமாகத் திரும்பி விடுவதும் உண்டு. ஏனெண்டால் எனக்கும் கோப்பையிலை உறிஞ்சிக் குடிக்கிற வழக்கம் பிடிக்காது...." இது யாழினியின் ஆமோதிப்பு.

"ஏன்? கோப்பையிலை அல்லது கிளாசிலை குடிக்கிறதாலை என்ன நட்டம்? காலத்துக் கேற்றமாதிரி நாங்கள் மாறிறதிலை பிழை ஒண்டுமில்லையே!'' பத்மினியின் எதிர்வாதம் இது. பொதுவாகவே துடுக்குத்தனமும் நாகரீக மோகமும், குறுகுறுப்பும் நிறைந்தவள் பத்மினி. ஒரு வகையில் யாழினியை விட அவள் அழகி என்றும் சொல்லலாம். யாழினி பெண்மையின் மென்மையும் - அமைதியும் கொண்டவள். பத்மினி பளிச் சென்ற கவர்ச்சியும் - துடுக்கும் மிக்கவள். அவளுடைய கேள்விக்கு முருகானந்தம் பதில் கொடுத்தான்.

''அதைத்தான் நமது பண்பாடு எண்டு சொல்லிட்டாரே தவம். பண்பாடு மட்டுமல்லாமல் சுகாதாரமும் கூட இந்த விஷயத்தில் அடங்கியிருக்குது''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

‘ஜெயகாந்தனிலை ஆரம்பிச்ச விவாதம் தேநீர்க்கோப்பையிலை போய் முடிஞ்சிருக்கு. நாங்கள் அவரை அந்தளவிலை விட்டிட்டு வந்திருக்கக் கூடாது....” என்று கலந்துரையாடலைத் திசை திருப்பினான் தவம்.

“அது சரி அவரை அப்படியே விட்டிருக்கக் கூடாதுதான். நீங்களே அவரைப் போய்க் கூட்டிக்கொண்டு வாங்கோ. ‘ஊருக்கு ‘நூறுபேர்’ புத்தகத்தைப்பற்றி நேரையே கேட்டிடலாம்” என்று அவள் நகைச்சுவையாய்க் சொல்லப்போக,

“ஆரை என்னையோ?” என்று கேட்டுக்கொண்டு வாசலில் நின்றான் சாரங்கன். எல்லோரும் கொல் என்று சேர்ந்து சிரிக்க அவன் எதுவும் புரியாமல் விழித்தான்.

‘பத்மினி’ ஊருக்கு நூறுபேர்’ புத்தகத்தைப் பற்றிக் கேட்க வேண்டுமென்று சொன்னதும், பேர் சொல்லாமல் ‘அவரைக் கூட்டிக்கொண்டு வாங்கோ’ என்று சொன்னதும் அப்போதுதான் வந்துகொண்டிருந்த சாரங்கனின் காதில் விழுந்ததால் அப்படி நினைத்துவிட்டான். பிறகு மாணிக்கவாசகர் நடந்ததை அவனுக்கு விளங்கப்படுத்தினார்.

அவன் நின்றுகொண்டிருப்பதை அவதானித்த யாழினி அவனை இருக்கச்சொன்னாள். ஏற்கனவே அவனிடம் புத்தகம் வாங்கிய விபரத்தையும் அவனது அறிவாற்றல் - ஆளுமைகளைப் பற்றியும் இந்தக் கலந்துரையாடலின் ஆரம்பத்தில் யாழினி சொல்லியிருந்ததால் அங்கு எல்லோர் மனதிலும் ஒரு நல்லபிப்பிராயம் ஏற்பட்டிருந்தது.

அவன் சங்கோஜத்தோடு தூரத்திலிருந்த வாங்கொன்றில் உட்காரப் போகும் போது வாசகர் தம்மருகே இருந்த கதிரையிலேயே அவனை அழைத்து அமரச்செய்தார். யாழினி தான் முன்பு குறிப்பிட்ட மஹாதேவனின் இந்த தத்துவ ஞானப் புத்தகத்தைக் கொடுத்தாள். பத்மினி மறுபடியும் ஒரு தேநீர் கொண்டுவந்து அவனுக்குக் கொடுத்தபோது



அவனை நிமிர்ந்து பார்த்தான் சாரங்கன். வாசகர் அவளையும் மற்றவர்களையும் முறைப்படி அவனுக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

சாரங்கனின் கலைக்கண்கள் பத்மினியை அளவெடுத்தன. அவளுடைய குறுகுறுத்த விழிகளும், கூரிய நாசியும், சிறிய சிவந்த உதடுகளும் குழந்தைத்தனமான முகமும் செழிப்பான உடல் வனப்பும அவன் மனத்தில் படிந்தன. அத்தகைய உடல் வாகு யாழினியிடம் இல்லை என்பதை அவன் கவனித்தான். ஆனால் பத்மினியிடமிருந்த கவர்ச்சிக்கும், செழிப்புக்கும் யாழினியின் பண்பாட்டையும், அடக்கத்தையும் இணைத்துக் கொண்டால்...... அந்த இணைப்பின் மூலம் ஒரு அம்மன் விக்கிரகம் அவன் மனக்கண்ணில் வரையப்பட்டது.

மறுபடி ஜெயகாந்தனை விட்டு நழுவிய விவாதம் இப்போது தத்துவ ஞானத்தில் இறங்கியது. எத்தனை படித்திருந்தாலும், கைத்திறன் வாய்த்திருந்தாலும் தான் மாணிக்கவாசகரிடம் சம்பளம் வாங்கும்ஒரு தொழிலாளி என்ற அடிப்படையான தாழ்வு மனப்பான்மை சாரங்கன் மனத்தில் இருந்து அவனை சங்கோஜப்பட வைத்தது. ஆனாலும் வாசகரின் தாராளமான போக்கும் அவனோடு இழைந்து பேசி விவாதித்த யாழினியின் பண்பும் அடிக்கடி கலகலத்த சிரிப்போடு அவனுடன் நெடுநாள் பழகியது போன்ற உரிமையோடு பேசிய பத்மினியின் இயல்பும் அவனை இயல்பான நிலைக்குக் கொண்டுவந்து விட்டன. அந்தவீடு நீண்டநேரம் கலகலப்பாகக் காணப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5

**"வண்டாடும் சோலைதனிலே
வந்தெனதுள்ளம் கவர்ந்தான்"**

இப்போதெல்லாம் தவம், முருகானந்தம் இவர்கள் போல சாரங்கனும் அந்தக் குடும்பத்தின் நெருங்கிய நண்பர்களில் ஒருவனாக ஆகிவிட்டான். அடிக்கடி அங்கே வந்து உரையாடிச் செல்வான். வாசகருடன் அரசியல், சில்ப சாஸ்திரம் இவற்றைப் பற்றியும் யாழினியுடன் தத்துவஞானம் இலக்கியம் இவை பற்றியும், பத்மினியுடன் திரைப்படங்கள், வானொலி நிகழ்ச்சிகள் இவை பற்றியும் பேசிக் கொள்கிற அளவுக்கு அவன் பல்துறை ஈடுபாட்டைக் கொண்டிருந்தான்.

ஒவ்வொரு செவ்வாய்க் கிழமைகளிலும் உதயகாலப் பூஜை முடிந்தவுடன் தேர்க்கொட்டகையில் நின்று அந்த சிற்பங்களைப் பற்றி அவனோடு ஒரு ஐந்து நிமிடமாவது பேசி விட்டு வருவது யாழினியின் வழக்கமாகி விட்டது. முன்பானால் ஏதாவது திருவிழா விசேஷங்களின் போது மட்டும் கோயிலுக்குப் போகும் பத்மினி இப்போதெல்லாம் இடையிடையே கோயிலுக்குப் போவதும், ஆனந்தையரின் மகள் பைரவியைச் சந்தித்து விட்டு வருகின்ற போதெல்லாம் தேர்க் கொட்டகைக்குப் போய்ப் பார்ப்பதும் வழக்கமாகி விட்டது. தேர் வேலை செய்பவர்கள் யாவருமே இவர்களை எசமானரின் மகள் என்று மரியாதையோடு வரவேற்பதும் இவர்கள் அந்தத் தொழிலாளர்கள் யாவருடனும் கலகலப்பாகப் பேசிவருவதும் சகஜமான நிகழ்ச்சியாயிருந்தது.

மதியபோசனத்தின் பின் வெற்றிலை குதப்பிக் கொண்டு அமர்ந்திருக்கின்ற வேளையில் அவர்களில் சில இளவட்டங்கள் இந்த இரு பெண்களைப்பற்றிய சுவாரசியமான பேச்சில் ஈடு



படுவதை சாரங்கன் வேலைகளில் மூழ்கியவாறே அவதானிப்பதுண்டு. சாதாரணமாகவே இளைஞர்களுக்குரிய முறையில் அவர்களின் நடையுடை பாவனைகள் அங்கலாவண்ணிய வர்ணனைகள், அளவீடுகள், மதிப்பீட்டுப் புள்ளிகள்........ என்று இவற்றையெல்லாம் அவன் பொறுமையாகக் கேட்டுக்கொண்டிருப்பான்.

ஆனால், அவர்கள் பத்மினியின் அதிநாகரீகத்தையும், கவர்ச்சியான தோற்றத்தையும் அசிங்கமாகவும் அப்பட்டமாகவும் வர்ணித்துக் கொண்டிருந்ததை ஒரு நாள் கேட்டபோது அவன் மிகவும் வேதனைப்பட்டான். அதன் பிறகு அவளை ஒரு நாள் தனியே சந்திக்க வாய்ப்பு நேர்ந்தபோது அதைப்பற்றி மறைமுகமாகக் குறிப்பிட்டதோடு அவளுடைய நடத்தையை உரிமையோடு கண்டிக்கவும் செய்தான். பத்மினி அன்று அவனைப் புரிந்துகொண்டாள்.

பத்மினியின் நடை உடை பாவனைகளிலும், சிந்தனைகளிலும் படிப்படியாக மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின, சாரங்கன் எதை விரும்புகிறான், எதை ரசிக்கிறான் என்பதை ஆராய்வதிலும் அதற்கேற்றபடி தன்னை மாற்றிக்கொள்வதிலும் அவள் ஈடுபாடு கொண்டாள். அடிக்கடி ஆலயத்திற்கு வருவதும் வேண்டுதல்கள் செய்வதும்கூட வழக்கமாகிவிட்டது.

ஏற்கனவே அவளுடைய போக்குகளால் கவலையடைந்திருந்த மாணிக்கவாசகர் இப்போதைய அவளுடைய மாற்றங்களால் மகிழ்ச்சியடைந்தார். பொதுவாக. முருகானந்தம், சாரங்கன், தவம் இவர்களின் வரவும் கலந்துரையாடல்களும் அவளை அப்படி மாற்றி வருகின்றன என்பதைத் தவிரச் சிறப்பான காரணம் எதையும் அவரால் ஊகிக்க முடியவில்லை. ஆனால் அவளுடைய இந்த மாற்றங்களைச் சிறிது சிறிதாக அவதானித்ததோடு அதற்கான உண்மைக் காரணகர்த்தா சாரங்கன் தான்என்பதையும் புரிந்துகொண்ட இன்னொரு இதயம் இருந்தது. அது யாழினியுடையதுதான். அதைப் புரிந்துகொண்டபோது அவளுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓரளவு ஏமாற்றமாகவும் வேதனையாகவும் கூட இருந்தது என்றாலும்கூட அந்த ஊகம் எவ்வளவு தூரம் சரியானது என்பதில் அவனுக்கும் நிச்சயமில்லை.

அந்த உருவத்திலே அமைந்திருந்த தெய்வீக ஒளியை ஓரளவுக்கு இந்த உருவத்திற்கு ஏற்றிவிட்டேன் என்ற திருப்தி சாரங்கனுக்கு ஏற்பட்டதாகவும் கூறமுடியாது. இந்த இரு பெண்களின் நடத்தைகளையும் நன்கு அவதானித்தபடி — ஆனால் அதில் — இந்த நாடகத்தில் தன் பங்கு என்ன என்பதை நிர்ணயித்துக்கொள்ள முடியாமல் அவன் தவித்துக் கொண்டிருந்தான்.



# 6

"நான் ஒரு விளையாட்டுப் பொம்மையா — ஜெகன்
நாயகியே உமையே — உந்தனுக்கு
நான் ஒரு விளையாட்டு பொம்மையா ?"

"ஏன் மாஸ்டர், இப்பெல்லாம் தவத்தை இஞ்சாலைப்பக்கம் காணேல்லை. ஆள் ஊரிலை இல்லையோ ?"

மாரியம்மன் கோயிலடி ஆலமரத்தின்கீழ் தனியாக அமர்ந்திருந்து பேசிக்கொண்டிருந்தனர் சாரங்கனும் முருகானந்தனும். திடீரென்று சாரங்கன் இப்படியொரு கேள்வியைக் கேட்டுக்கொண்டு முருகானந்தத்தை நோக்கினான். முருகானந்தம் இவனைத் திரும்பிப் பார்க்கவில்லை. நேரே தூரத்தில் தெற்கே தெரிந்த நெல் வயல்களை அவர் கண்கள் வெறித்துக்கொண்டிருந்தன. தென்றற் காற்று ஜிலு ஜிலுவென்று அந்த நெல் வயல்களினூடு புகுந்து வரும்போது அவைகள் அழகாக அசைந்து கொண்டிருந்தன.

"ஆள் உங்கைதான்...... ஏதோ பிஸிபோலை இருக்கு......" என்று அக்கறையில்லாமல் வந்தது மாஸ்டரின் பதில். சாரங்கனுக்கு அந்தப் பதில் மட்டுமல்ல, அவருடைய முகமும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. அவ்வளவுநேரமும் கலகலப்பாகப் பேசிக்கொண்டிருந்தவர், தவத்தைப்பற்றிப் பேசியதும் முகம் மாறிப்போய் அலட்சியமாய்ப் பதில் சொல்வதேன்? ஒரு வேளை தவத்துக்கும் இவருக்குமிடையில் ஏதாவது பிரச்சினையோ.... என்று மனம் குழம்பினான். அவன் மறுபடி பேச்சைக் கிளறினான்.

"இல்லை மாஸ்டர், இடையில் ஒருநாள் மட்டும் கோயிலடிப் பக்கம் வந்து கும்பிட்டிட்டு உடனையே போட்டான். என்னோடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைக்கேல்லை. பத்மினி வீட்டுப்பக்கமும் போகேல்லை. வேறை ஒருநாள் றோட்டிலை கண்டபொழுதும் காணுகமாதிரிப் போட்டான். அதுதான் என்னோடை ஏதாவது மனஸ்தாபமோ தெரியேல்லை...'' என்று இழுத்தான் சாரங்கன்.

முருகானந்தம் இவன் முகத்தை ஒருமுறை ஏறிட்டுப் பார்த்துவிட்டு மணலில் கைகளைத் துளாவினார். கையில் அகப்பட்ட இரண்டு கற்துணிக்கைகளை எடுத்து ஒன்றோடொன்று தட்டினார். அர்த்தமில்லாத அவர் செய்கைகளையும் அர்த்தம் நிறைந்த மௌனத்தையும் மிகக்கவனமாகப் பார்த்துக்கொண்டிருந்தான் சாரங்கன். கையிலிருந்த கற்களை எதிரே இருந்த கிணற்றை நோக்கி வீசினார் மாஸ்டர். இரண்டும் கிணற்றுக் கட்டில் மோதிவிட்டுக் கீழேயே விழுந்தன. ஒன்றுகூட கிணற்றுக்குள் விழவில்லை.

அவர் மனதில் பெரியபோராட்டம் நடந்துகொண்டிருந்தது. முக்கியமான ஒரு பிரச்சினையை சாரங்கனிடம் சொல்வதா? விடுவதா? சொல்லவேண்டிய ஒரு சந்தர்ப்பம் எப்படியோ ஏற்பட்டுவிட்டது. அதை எப்படி ஆரம்பிப்பது? எப்படிச் சொல்வது?,

"சாரங்கன்! நீ ஒரு பெரிய பிரச்சினைக்குள்ளை மாட்டுப்பட்டிருக்கிறாய். அதைப்பற்றி நான் முந்தியே சொல்லியிருக்கோணும்...... எப்பிடிச் சொல்லுறதெண்டு தெரியாமல்தான்......"

சாரங்கன் திடுக்கிட்டான். தவத்தைப்பற்றிக் கேட்கப்போக இவர் ஏதோ தன்னையே பிரச்சினைக்குள்ளை இழுக்கிறாரே என்று அவன் திகைத்தான். கால்களை மடக்கி சற்று உசாராக உட்கார்ந்து கொண்டு மாஸ்டரை உறுத்து நோக்கினான்:

மாஸ்டர் இப்போதும் வயலில் வளைந்து தலைசாய்ந்து நிற்கும் பொன்னிற நெல்மணிகள் அந்த மாலை வெய்யிலில் மின்னுவதைப் பார்த்துக்கொண்டிருக்கிறார். சில நெற்கதிர்கள் வளர்ச்சியுறாமல் அரைவாசியில் தலை நீட்டியபடி நிற்கின்றன. 'அறுவடையின்போது அவை அகப்படக்கூடும். தப்பிவிடவும் கூடும்' என்று அவர் நினைத்தார்.



"சாரங்கன், நீ உன்னையறியாமலே உன்னைச் சுற்றி ஒரு வலைச்சுருக்கை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறாய். அந்த வலை உன்னை எந்த விதத்தில் பாதிக்குமோ எனக்குத் தெரியாது. வலையிலை இருந்து தப்பிக்கொள்ளிற சந்தர்ப்பம் இனி இல்லை. ஆனால் அந்த வலையை ஆர் இழுக்கப்போகினம் எண்டதுதான் பிரச்சினை"

"என்ன மாஸ்டர் புதிர் போடுறியள். எனக்கு ஒண்டும் விளங்கேல்லை.

"நீ தெரிஞ்சோ தெரியாமலோ இரண்டு பெண்களின்ரை வாழ்க்கையோடை விளையாடிக் கொண்டிருக்கிறாய். அதுகும் பெரிய இடத்துப் பிள்ளையள். இது எங்கை போய் முடியப் போகுதோ தெரியாது!''

இப்போது சாரங்கனுக்கு ஓரளவு விஷயம் புரிந்தது. தனக்கும் மாணிக்கவாசகரின் பெண்களுக்குமிடையே ஏற்பட்டிருக்கிற நெருக்கத்தைப் பற்றித்தான் அவர் பேசுகிறார் என்பதைப் புரிந்து கொண்டான். தனக்கே பிரச்சினையாக - தானே தனக்குள் விவாதித்து விவாதித்துச் சலித்துப்போயிருக்கின்ற ஒரு பிரச்சினையை இன்று இவர் விவாதத்துக்கு எடுத்துக்கொண்டிருக்கிறார். அதுவும் கூட ஓரளவுக்கு நல்லது என்றே சாரங்கனுக்குத் தோன்றியது. ஏனென்றால் தன்னுடைய மனதுக்குள் கிடந்து குமைந்து சுமையாகக் கனத்துக் கொண்டிருந்த ஒரு பிரச்சினையை இன்று இவருடன் பேசுவதன் மூலம் ஒரு ஆறுதல் பெற முடியுமோ என்று எண்ணினான். ஆனால் இதற்கும் தவத்திற்கும் எங்கே முடிச்சு விழுகிறது என்று அவன் யோசித்த போது மாஸ்டரே சொன்னார்,

"மாணிக்கவாசகரின் பெட்டையளுக்கும் தேர் வேலை செய்யிற தச்சுப் பெடியன் சாரங்கனுக்கும் ஏதோ தொடுப்பு இருக்குதாம் எண்டு ஒரு சின்னச் சலசலப்பு ஊருக்குள்ளை உலாவத் தொடங்கியிருக்கு. உன்னோடை வேலை செய்யிற பொடியளை இந்தக்கதையை உலாவ வைத்திருக்கக் கூடுமெண்டு நான் நினைக்கிறன். அது என்ரை தனிப்பட்ட கருத்து.......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“இந்தக்கதை தவத்தின்ரை காதிலையும் விழுந்ததாலை அவன் இங்கை அடிக்கடி வாறதை விரும்பேல்லை. இந்தமாதிரியான பிரச்சினையளுக்குள்ளை தலையிட விரும்பாததாலை ஆள் மெல்ல விலகிப்போட்டுது. நான் இதைப்பற்றி உன்னட்டை எப்பிடிச் சொல்லிறதெண்டு யோசிச்சுக் கொண்டுதான் இவ்வளவு நாளும் இருந்திட்டன். இந்தக் கதை வாசகருக்கும் சாடையாய்த் தெரியும்போலை கிடக்கு. ஆனால் தேர் வெள்ளோட்டம் முடியும் மட்டும் ஒரு குழப்பமும் வரக்கூடாதெண்டு பேசாமல் இருக்கிறார் எண்டு நான் நினைக்கிறன்......”

சாரங்கன் இப்போது மௌனமாக இருந்தான். அவனுடைய முகபாவத்தை அவதானித்தபடி மாஸ்டரும் மௌனத்தையே கடைப்பிடித்தார்.

இப்படி ஒரு பிரச்சினை வரும் என்பதை முன்கூட்டியே சாரங்கன் தெரிந்து வைத்திருந்த போதிலும் இப்போது திடீரென்று அந்தப் பிரச்சினை தலை நீட்டியபோது அதற்கு எப்படி முகம் கொடுக்கலாம் என்று யோசிக்க முற்பட்டான். மாஸ்டருடன் இவ்விஷதத்தைப் பூரணமாக விவாதிக்கலாம் என்று அவன் சிந்தித்துக் கொண்டிருந்தான்.

முருகானந்தம் மாஸ்டர் அவன் முகத்தையே பார்த்தபடி - அதிலிருந்து எதையோ படித்தறிவது போல உற்றுநோக்கிக்கொண்டே யோசனையில் ஆழ்ந்தார். சற்றுமுன் அவன் தவம்பற்றிப் பேசியபோது “தவம் பத்மினி வீட்டிற்குக்கூடப் போகவில்லை” என்று சொன்ன வசனத்தில் ‘பத்மினி வீடு’ என்ற சொற்றொடரை ஆராய்ந்து கொண்டிருந்தது அவர் மனம்.

யாழினி - பத்மினி இருவருக்குமே அவர் பாடம் சொல்லிக்கொடுப்பவர் என்கிற முறையில் மட்டுமல்லாமல் அவர்களுடைய குடும்பத்தின் நெருங்கிய நண்பனாகவே அவர் அவர்களுடன் சகஜமாகப் பழகியதிலிருந்து அவர் அநேக விஷயங்களை அவதானித்துக் கொண்டு வந்திருக்கிறார்.



சாரங்கனுடைய தொடர்பு ஏற்பட்ட நாளிலிருந்தே இரண்டு பேரிலும் நிறைய மாற்றம் ஏற்படத் தொடங்கியிருந்தது. இருவரும் அவனால் கவரப்பட்டிருக்கின்றனர். இருவருமே அவனில் அக்கறை காட்டினர். வரவரப் பாடங்கள் படிப்புகளில் கூட அவர்களுக்கு அக்கறை குறைந்து வருவதையும் அவர் கவனிக்கத் தவறவில்லை. இதைப்பற்றி நேரடியாகவே கூறிக்கண்டித்ததோடு மாணிக்கவாசகரிடமும் சாடையாகக் கூறியிருக்கிறார். அப்போது அவர் கூறிய பதிலிலிருந்தே இவர்களது ஊக்கமின்மைக்கான காரணத்தை - இவரைப்போலவே - அவரும் ஓரளவு ஊகித்திருப்பதாக உணர்ந்தார் மாஸ்டர்.

அதற்கேற்றபடி மாலை நேரங்களில் நடந்து வந்த கலந்துரையாடல்களைக் குறைப்பதற்கான வழிவகைகளை மறைமுகமாக எடுத்து வந்தார். தவமும் விஷயத்தைப் புரிந்துகொண்டு இந்த சந்தர்ப்பத்தில் தனது வருகையைக் குறைத்துக் கொண்டான். முருகானந்தமும் அத்தகைய சந்தர்ப்பங்களைத் தவிர்த்துக் கொள்வது சுலபமாக இருந்தது.

ஆனால், எதற்காக இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டதோ அதே காரியத்திற்கு இந்த ஏற்பாடு எதிர்மறையாகப் பயன்பட்டதை முருகானந்தம் சாடையாக உணர்ந்து கொண்டார். ஏதோ ஒரு வகையில் இவர்கள் தனிமையில் சந்தித்துக் கொள்கிறார்கள் என்பது தான் அது. அதேநேரம் உண்மையாக சாரங்கனைக் கவர்ந்து கொண்டவள் இவர்களில் யார்? என்பது இவருக்குப் புதிராகவே இருந்தது.

பத்மினியின் நடை உடை பாவனைகள் ரசனைகளில் ஏற்பட்ட திடீர் மாறுதல்களையும், அப்போதுதான் பருவமுற்றவள் போலத் திடீரென்று ஏற்பட்ட ஒருவகை முதிர்ச்சியையும் அவளது பேச்சு வார்த்தைகளையும் அவதானித்த மாஸ்டர் அவள் நிச்சயமாக சாரங்கனைக் காதலிக்கின்றாள் என்று புரிந்து கொண்டார்.

யாழினியோ சுபாவத்திலேயே அடக்கமானவள். வெளிப்படையாக அவள் எண்ணத்தை உணர்ந்துகொள்ள முடியாது. என்றாலும் அவளுக்கும் அவனில் அக்கறை உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படியானால் சாரங்கனின் பங்கு இதில் என்ன? இரண்டு பேரின் உணர்ச்சிகளையும் தூண்டிவிட்டு 'வெள்ளோட்டம்' முடிந்தவுடன் ஓடி விடப்போகிறானா? அல்லது பத்மினியை மட்டும்தான் அவன் உள்ளன்போடு காதலிக்கிறானா? அதுவும் அல்லாமல் அவனது வெளிப்படையான மனம் திறந்த போக்கை விபரீதமாகக் கருதி இரண்டு பெண்களுமே தம்மைத்தாமே ஏமாற்றிக் கொள்கின்றனரா?

இப்போது சற்று முன் இவன் 'பத்மினியின் வீடு' என்று சொன்னானே! மாணிக்கவாசகர் வீடு, அல்லது யாழினியின் வீடு என்று சொல்லாமல் 'பத்மினி வீடு' என்று சொல்கின்ற அளவுற்கு இவனுக்குப் பத்மினியின் மேல்தான் ஈடுபாடு அதிகம் இருக்கிறது என்பதை இப்போது தனக்குள் நிரூபிக்க முயற்சிக்கிறார் மாஸ்டர்.

"இதிலை ஒரு முக்கியமானவிசயம் சாரங்கன்! மாணிக்கவாசகருக்கு ஒரு பெட்டை இருந்து அவளை நீ காதலிச்சு அதைப் பற்றி ஊருக்கை ஒருகதை வந்தது எண்டால் என்னைப்பொறுத்த வரைக்கும் நான் பிரச்சினையாக எடுக்க மாட்டன். வேணுமெண்டால் நானும் கூடவந்து சாட்சிக் கையெழுத்துப் போட்டுக் கலியாணத்தை முடிச்சுவைப்பன். ஆனால் ......"

"ஓஹோ! இவர் தனக்கு ஒரு துணையாக இருப்பாரோ" என்று நினைத்துத் திருப்தியுற்ற அதேவேளையில் அவருடைய ஆனால் என்பது இவனைக் கொக்கி போட்டு நிமிர்த்துகிறது.

"மாணிக்கவாசகருக்கு நாலைஞ்சு பெட்டையள். இப்ப ஒரு பெட்டை சாதிமாறிக் கலியாணம் செய்தால் மற்றப் பிள்ளையளின்ரை வாழ்க்கை பிரச்சினையாய்ப் போம். அது மாத்திரமல்ல பத்மினி - யாழினி ரண்டு பேரிலை நீ ஆரைக் காதலிக்கிறாய் எண்ட ஒரு கேள்வியை நான் கேட்கிற பொழுதே, அந்த ரண்டு பேருமே உன்னைக் காதலிக்கினம் எண்ட உண்மையையும் நான் சொல்லியாகவேணும்".



"அதுதான் மாஸ்டர் எனக்கும் பிரச்சினையாயிருக்கு" என்று அவன் அழுவாரைப்போலச் சொன்னபோது பரிதாபமாக இருந்தது மாஸ்டருக்கு.

"எது? என்ரை கேள்வியிலையா, மறுமொழியிலையோ உனக்குப் பிரச்சினை?

"கேள்வியிலையே பிரச்சினை......'

ஒரு கலைஞனின் உணர்ச்சி மிகுந்த உள்ளத்தைப் புரிந்து கொள்ள முடிகிறது முருகானந்தத்திற்கு. தான் அந்த தேரிலே செய்துள்ள இரண்டு அழகிய சிற்பங்களைப் பார்த்து அவற்றில் எது சிறந்தது என்று சொல்ல அவனால் முடியாது! இரண்டுமே அவனுக்கு அழகாகத்தான் தோன்றும்.

கலைஞனின் உணர்ச்சிகள் மதிப்பளிக்கப்பட வேண்டியவை தான். ஆனால் அவை தவறு செய்துவிடக்கூடிய அளவுக்கு அதிகப்பட்டு விடக்கூடாது என்று நினைத்தார் அவர்.

"அப்ப, நீ ஆரைக் காதலிக்கிறாய் எண்ட விசயத்தை நீயே இன்னும் தீர்மானிக்கேல்லை...... அப்பிடியெண்டால் அந்தப் பெண்களின்ரை வாழ்க்கைக்கு என்ன முடிவு? நீ இரண்டு பெண்களின் வாழ்க்கைக்கு மறுமொழி சொல்ல வேண்டிய கட்டாயத்திலிருக்கிறாய்! அதுமட்டுமல்ல, அதுகளுக்குப் பிறகும் ரண்டு பெட்டையள் இருக்குதுகள்......"

மாஸ்டர் உண்மையில் சற்றுக் கோபமும் கண்டிப்புமாகத் தான் சொன்னார். சொல்லிக்கொண்டே எழுந்து நின்று நேரத்தைப் பார்த்தார். இரவு ஏழரையாகிவிட்டது. அர்த்தஜாமப் பூஜைக்குரிய நைவேத்தியத்தை எடுத்துக்கொண்டு ஆனந்தையரின் மகள் பைரவி ஆலயத்துக்கு வந்துகொண்டிருந்தாள்.

நீந்தத் தெரியாதவனை நடுக்கடலில் இழுத்துக் கொண்டு வந்து அப்படியே விட்டுவிட்டு ஓடிவிட்டாற்போல் இருந்தது சாரங்கனுக்கு அவன் தன் பங்குக்குரிய நியாயங்களை இன்னும் சொல்லவில்லையே. தன்னோடு மனம்விட்டுப் பேசக்

கூடிய ஒரே ஒருவர் இந்த முருகானந்தம் மாஸ்டர். நிறையப் பேசி ஒரு முடிவை எடுக்கலாமென்றால் அவர் அவசரமாகப் புறப்படுகிறார். அவருக்கும்கூட இப்படிப் புறப்பட விருப்ப மில்லைதான். இன்று ஒரு நல்ல முடிவை எடுத்துவிடத்தான் விரும்பினார். ஆனால் அவருக்கு அவசர வேலை ஒன்றிருந்தது.

"சாரங்கன், நான் நாளைக்குக் கொழும்புக்குப் போறன். இப்பவும் அது சம்பந்தமாய் ஒரு அவசர வேலையாய்த்தான் போறன். ஆறுதலாய்க் கதைக்க முடியேல்லை. மன்னிச்சுக் கொள்ளு. நான் வர நாலைஞ்சு நாள் செல்லும். வந்து எல்லாம் ஆறுதலாய் யோசிப்பம். நீயும் நிதானமாய்ச் சிந்திச்சுப்பார்.... அதுசரி தேர் வேலையள் எந்தளவிலை இருக்கு

"எல்லாம் முடிஞ்ச மாதிரித்தான். இன்னும் மூன்று கிழமைதானே இருக்கு வெள்ளோட்டத்துக்கு......"

"ஓ! அப்ப எங்கடை பிரச்சினையையும் கெதியிலை முடிக்க வேணும். தேர் வேலை முடிஞ்சால் நீ ஊருக்குப் போயிடுவாய் அல்லோ?"

"கோயிலிலை வேறையும் வேலை இருக்கெண்டு கதைச்சவை சிலநேரம் பேந்தும் இருக்கவேணும்......"

"நான் அப்பிடி நினைக்கேல்லை இப்ப இருக்கிற மாதிரியிலை தேர் வேலைக்குப் பிறகு வேறை வேலை நடக்காது. ஊருக்குள்ளை சாதிப்பிரச்சினை ஒண்டு கிளம்பியிருக்குது, வெள்ளோட்டமே எக்கச்சக்கமான குழப்பத்தோடைதான் நடக்கும்போலை...... சரி நான் வாறன்......"

அவர் போய்விட்டார். சாரங்கனைவிட இரண்டு வயது தான் மூத்தவர் மாஸ்டர். ஆனால் அவருடைய அனுபவமும் அறிவும் அவனை வியக்கவைத்தன. அன்றைய அவருடைய வார்த்தைகள் அவனது சிந்தனையைக் கிளற அவன் கோபுர வாச லில் நின்று கருவறையை நோக்கிக் கரம் குவித்தான். பூஜைக்கு ஆயத்தம் நடந்து கொண்டிருந்தது.



# 7

**"கண்ணனே என் கணவன் — வேறு கருத்துமில்லை......"**

திருவிழா நெருங்கிக் கொண்டிருக்கிறது. அடுத்தபௌர்ணமிக்குத் தீர்த்தம்.பத்துநாள் திருவிழா.இன்னும் சரியாகஎண்ணி மூன்றாம் நாளில் கொடியேற்றம். ஒன்பதாம் நாள் தேர்த் திரு விழா, நாளை மறுதினம் வெள்ளோட்டம், தேர் வேலைகள்யாவும் பூர்த்தியாகிப் பூச்சுவேலைகள் தான் நடந்து கொண்டிருக்கின்றன. தேர்த்திருவிழாவையும் ஒப்பேற்றி முடித்து விட்டால் அந்த ஊரை விட்டே போய்விடலாம். பிரச்சினை தீர்ந்துவிடும் என்று எண்ணிக் கொண்டார் கந்தசாமி ஆசாரியார்.

அவருக்கும் தன் மகனைச் சூழ்ந்திருக்கின்ற பிரச்சினைகள் பற்றி ஓரளவு தெரிந்திருந்தது. ஊர்ப்பேச்சுக்கள் அவர் காதிலும் ஓரளவு விழுந்திருந்தது. மாணிக்கவாசகரும் குறிப்பாகச் சொல்லியிருந்தார். அதனால் இந்த இரண்டொரு வாரங்கள் அவர் முள்ளின் மேல் நின்று வேலை செய்து கொண்டிருந்தார். வேலை முடிந்து புறப்பட்டால் போதும் என்றிருந்தது.

ஆனால் அது இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வாகிவிடாது என்பதும் அவருக்குத் தெரியும். அங்கிருந்து தப்பி ஓடிவிடுவதால் தீர்ந்து விடக்கூடிய பிரச்சினையா அது? வயதுக்கு வந்து விட்ட மகன். கண்டித்துப் பேச முடியாத நிலை. நன்மை தீமை தெரிந்தவன் அவன். இவர் சொல்லி அவன் கேட்கும் நிலை இல்லையே......

சாரங்கன் இன்னமும் மதில்மேல் பூனையாகத் தத்தளித்துக் கொண்டிருந்தான். இரண்டொரு நாளில் வந்து விடுவதாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறிப்போன முருகானந்தத்தை இன்னமும் கண்டபாடில்லை. முக்கிய அலுவலால் தாமதமேற்படுவதாயும் திருவிழாவின் போது எப்படியும் வந்து விடுவதாயும் இரண்டொரு நாளின் முன் அவனிடமிருந்து கடிதம் வந்திருந்தது. தவம் இப்போது அந்தப் பக்கம் வருவதையே நிறுத்தியிருந்தான். தன் மனக் குழப்பத்தைத் தீர்க்க வழிதெரியாமல் சாரங்கன் தவித்தான்.

இப்பபோதெல்லாம் சாவகாசமாக பத்மினியுடனோ யாழினியுடனோ பேசுவதற்கு சந்தர்ப்பம் நேருவதில்லை. எப்படியும் இது குறித்து அவர்களிடம் நேரடியாக விவாதித்துத் தீர்மானம் எடுத்துவிடவேண்டும் என்று நினைத்துக்கொண்டான். எப்படியும் அந்த இருவரில் ஒருவர் தியாகம் செய்தாக வேண்டுமென்பதை மட்டும் அவன் புரிந்து கொண்டான். அது யார்?

யாழினியில் அவன் தெய்வத்தைக் கண்டிருக்கிறான். பத்மினியில் அவன் படுசுட்டித்தனமான ஒரு வெகுளிப்பெண்ணைக் கண்டிருக்கிறான். இரண்டும் அவன் அவர்களை முதன் முதல் சந்தித்த போது. இப்போதும் யாழினி தெய்வத்தன்மையோடுதான் அவனுக்குத் தோன்றுகிறாள், அவளைக் காணும்போது ஏதோ ஒரு வித மரியாதையும் பாசமும் தன்னுள் எழுவதைத்தான் அவன் உணர்கிறான்.

பத்மினியை முதன் முதல் கண்டபோது கவர்ச்சிகரமான அந்தக் குழந்தை முகமும் - சுட்டித்தனமும் அவனைக் கவர்ந்த போதும் அவளுடைய அடக்கமற்ற தன்மையும் கவர்ச்சிகரமான நாகரிகப் போக்கும் வெறுப்பை அளித்திருந்தன.

இப்போது........? பத்மினி மாறிவிட்டாள். எதற்காக? இவனுக்காக. அடக்க ஒடுக்கமாக - பக்தியும் பண்பாடும் மிக்க ஒரு குடும்பப் பெண்ணாக மாறியிருக்கிறாள். இவனுடைய கூட்டுறவால் - இவனுக்காக வேண்டி இப்படித் தன்னுடைய சுயத்தை இழந்து தன்னை மாற்றிக் கொண்டவளை - ஓரளவு வெளிப்படையாகவே தனது காதலை இவனிடம் காட்டிக்கொண்டவளை - இவன் மனத்தை உண்மையாகவே கவர்ந்துவிட்ட பத்மினியை இனி ஒரு தியாகம் செய்யச் சொல்வது பொருந்தாது.



'நான் உண்மையாகவே பத்மினியைக் காதலிக்கிறேன் - அவளும் என்னைக் காதலிக்கிறாள். அவன் இதில் உறுதி கொண்டான். ஆனால் யாழினியை அவன் மதிக்கிறான். போற்றி வணங்கத் தயாராக இருக்கிறான். ஆனால் காதலிக்கத் தயாராக இல்லை. இதையும் மிகத் தெளிவாகப் புரிந்து கொள்கிறான்.

மிகவும் காலம் கடந்த ஞானம். இதை எப்போதோ புரிந்து கொண்டு யாழினியையும் புரிந்து கொள்ளச் செய்திருக்க வேண்டும். தெரிந்துகொண்டே ஒரு பெண்ணின் வாழ்க்கையில் விளையாடிவிட்டு......

"......ஆனால் அவள் இத்தகைய ஏமாற்றத்தைத் தாங்கிக் கொள்ளக்கூடியவள்...... தங்கைக்காக அவள் ஒரு தியாகத்தைச் செய்யக் கூடியவள்......." தன் மனத்தைத் தானே திருப்தி செய்து கொள்வதற்காக அவளுக்கு இப்படி ஒரு நற்சாட்சிப் பத்திரத்தைத் தனக்குள் தயார் செய்து கொண்டு......

யாழினிக்குப் பரிசளிப்பதற்காக ஒரு 'குறிஞ்சி மலரை' வாங்கிக் கொண்டான் சாரங்கள். நா. பார்த்தசாரதி எழுதிய அந்த நாவல் அவன் மனத்தைக் கவர்ந்தது. பெண்மையின் இலக்கணமான அந்த நாயகி பூரணியை எண்ணி அவன் வியந்திருக்கிறான். யாழினியும் அப்படி. ஒரு காவியத்தின் நாயகியாக வேண்டியவள். அவளுக்கு இந்த நாவலைப் பரிசளித்துவிட்டு அதே நேரம் எப்படியாவது தன் உள்ளக் கருத்தையும் சொல்லிவிடவேண்டும் என்ற எண்ணத்தில் புறப்பட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8

**" வேலவன் ஏன் என்னை வருத்துகிறான்—என்**
**வேதனையாலவன் பெறுவதென்ன "**

மாணிக்கவாசகர் கோயில் திருவிழாவிற்கான ஆயத்தங்களிலும் அன்று காலை நடந்து முடிந்த வெள்ளோட்டம் சம்பந்தமான நிகழ்ச்சிகளிலும் ஈடுபட்டிருப்பதால் வீட்டில் நிற்கமாட்டார் என்பது அவனுக்குத் தெரியும். வாசகரின் மனைவியும் இளைய பிள்ளைகளும் எங்கோ பஸ்ஸில் புறப்படுவதையும் அவன் கண்டுகொண்டு யாழினியின் வீட்டிற்கு முன் வந்து நின்றான். உள்ளே நுழையும்போது சற்றுத் தூரத்தில் பத்மினி, பைரவியின் வீட்டிற்குள் நுழைவதையும் கண்டான். அவன் எதிர்பார்த்த சாதகமான சந்தர்ப்பம அதுதான் என்று எண்ணியபடி யாழினியை அழைத்தான் சாரங்கன். ஆனால் அது அவன் எதிர்பார்த்திராத - மிகவும் பாதகமான ஒரு சந்தர்ப்பம் என்பதை அவன் அங்கிருந்து புறப்படும்போது வேதனையோடு புரிந்துகொண்டான்.

அவன் வந்தபோது குளித்துவிட்டு அப்போதுதான் வந்திருந்த யாழினி அழகுத் தேவதையாக மினுமினுத்தாள். சரியாக ஆடை அணியாமல் தலையைத் துவட்டியபடி நின்றவள் இவனைக் கண்டவுடன் திகைத்தாள். அவனும் ஒருகணம் திடுக்கிட்டான். எதிர்பாராத சந்திப்பு...... வார்த்தை எழவில்லை. அவன் மௌனமாக 'குறிஞ்சி மலரை' நீட்டினான். அவள் அதை வாங்கும்போது அவன் கரங்களில் சூடான இரண்டு சொட்டுக் கண்ணீர் விழுந்தன. அவன் நிமிர்ந்து பார்த்தான். அவள் கண் கலங்கத் தலை குனிந்தாள். அவள் மிகவும் உணர்ச்சிவசப்பட்டாள். கண்கள் படபடத்தன. உதடுகள் துடித்தன. உடல் நடுங்கியது. முகம் வெளிற அவனை ஒருமுறை நிமிர்ந்து பார்த்துவிட்டு,



" ஊர்க்கதை அறிஞ்சிருப்பியள், எனக்கு அவசரமாய்க் கலியாண ஆயத்தம் நடக்குது......" தட்டுத் தடுமாறி விம்மலுடன் கூறியவள் குலுங்கினாள். அவன் மௌனம் கலையவில்லை. என்ன சொல்வதெனத் தெரியாமல் அவனும் துடித்தான். உணர்ச்சிவசப்பட்ட அவன் கரங்கள் மட்டும் அவனது கட்டுப்பாட்டையும் மீறி இயங்கின. அவள் கண்ணீரைத் துடைத்துவிட்ட அவன் கைகளை அவள் கரங்கள் பற்றின, அவன் தன் தீர்மானத்தை மறந்தான். சொல்லவந்ததைச் சொல்ல முடியாமல் தவித்தான். அவன் எதிர்பாராதவிதமாக அத்தியாயம் புதிய திசையில் திருப்பப்பட்டுவிட்டது.

அவன் நெஞ்சம் நிறைந்த சுமையோடு அவசரம் அவசரமாக வெளியேறிக் கொண்டிருந்தபோது அவன் முதுகைப் பார்த்தபடி உள்ளே நுழைந்தாள் பத்மினி. அவன் போகும் அவசரத்தையும் அவனது பதட்டத்தையும் பார்த்தபடி அவனை அழைக்கத் தோன்றாமல் உள்ளே நுழைந்தவள் யாழினியின் பதட்டத்தையும் பார்த்தபோது எதையோ புரிந்துகொண்டாள். எதையும் அவள் பேசவில்லை. அறைக்குள் சென்று தாழிட்டுவிட்டுக் குமுறினாள். அவளுக்கு அந்த நேரம் என்ன உணர்ச்சி இருந்ததென்று தெரியவில்லை. கோபமா? ஆற்றாமையா? கவலையா? ஏமாற்றமா? .. ....

இதே சூழ்நிலையில் இத்தனை உணர்ச்சிகளையும் சேர்த்துக் குமுறியது யாழினியின் இதயம். அவளும் தன் தனியறையில் அழுதுகொண்டிருந்தாள்.

வெறித்த பார்வையுடன் - வெறிபிடித்த நடையோடு - எங்கு போகிறேன் என்ன செய்கிறேன் என்று தெரியாமல் நடந்து கொண்டிருந்தான் சாரங்கன்.

நடக்கக் கூடாதது நடந்துவிட்டது. அது எப்படி நடந்தது? ஏன் நடந்தது? யாரால் நடந்தது?

இதன் விளைவு என்ன? இனி என்ன நடக்கப் போகிறது? மூன்று உள்ளங்களையும் இதே கேள்விகள் குடைந்து கொண்டிருந்தன. நடந்து விட்ட காரியத்தின் விளைவு இப்போதுதான் அவர்களுக்கு மெல்ல மெல்லப் புரிந்து கொண்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேகமாக நடந்துகொண்டிருந்த சாரங்கனை எதிரே வந்து கொண்டிருந்த முருகானந்தம் மாஸ்டர் பிடித்து உலுக்கிய போதுதான் சுயநினைவு பெற்று நின்றான். அவன் தோற்றத் தைக்கண்டு பயந்துவிட்டார் மாஸ்டர். அன்று வெள்ளோட்டம் என்று அவருக்குத் தெரியும். ஏற்கனவே சாதிப்பிரச்சினை ஒன்றின் காரணமாகத் தேர் வெள்ளோட்டில் பிரச்சினைகள் ஏதும் ஏற்படக் கூடும் என்று எதிர்பார்த்த மாஸ்டர் இப்போது அப் படித்தான் ஏதாவது நடந்திருக்குமோ? என்று எண்ணினார்.

பதற்றத்துடன் வினவினார், "என்ன சாரங்கன் இந்தக் கோலம். வெள்ளோட்டம் முடிஞ்சுதே?"

"ஓ! ...... இப்பத்தான் நடந்தது......." என்று தடுமாறினான். "என்ன? இப்பவோ? காலமை எண்டல்லோ......."

"ஓமோம் ... காலமைதான் நடந்தது......." அவனது தடுமாற்றத்திலிருந்து வேறு ஏதோ நடந்துள்ளதெனப் புரிந்து கொண்ட மாஸ்டர் அவனை ஆசுவாசப்படுத்தி அழைத்துக் கொண்டு அருகே ஒரு தனியிடத்தை நாடிச் சென்றான். சாரங் கன் குமுறிக் குமுறி அழத்தொடங்கினான்.



# 9

"தாயே யசோதா உந்தன் ஆயர்குலத்துதித்த
மாயன் கோபாலகிருஷ்ணன் செய்யும் ஜாலத்தைப் பாராய்"

வெள்ளோட்டம் முடிந்து விட்டது. தேர்த் திருவிழா, சரியானபடி நடக்குமா என்பதில்தான் இப்போது சந்தேகம்! ஊரில் எங்கும் இதே பேச்சு. இத்தனை செலவில் செய்து முடித்த பென்னம் பெரிய தேரிலே சரியான முறையில் அம்பாள் ஆரோகணித்து வலம் வருவாளா, இல்லையா என்று ஊரில் எல் லோருமே கேட்டுக்கொண்டனர்.

ஊர் இரண்டுபட்டிருந்தது. அந்தக் கோயிலுக்கு உரிமை பாராட்டிக்கொண்டிருப்பவர்கள் இரண்டு பிரிவினர். தாழ்த் தப்பட்டவர்கள் அல்ல என்றாலும் கூட சாதியால் குறைந்தோர் என்று கணிக்கப்படுகிற ஒரு வகுப்பினர் பெரும்பான்மையின ராக அந்தக் கோயிலுக்கு உரிமை கொண்டாடி வந்தனர். உயர் சாதியினரென்று சொல்லிக்கொள்ளும் வேறொரு வகுப்பினரும் நாம்தான் உரிமையாளர் என்று சொல்லிக்கொண்டனர். இவ் விரு சாராரிடையே அடிக்கடி பிரச்சினைகள் போட்டிகள் எழுந் தாலும்கூட அவர்களின் போட்டி காரணமாக ஆலயம் படிப் படியாக முன்னேறிக் கொண்டிருந்தது. அதன் இறுதிக்கட்டம் இந்தத் தேர்த்திருப்பணி.

பிரிவினை இரண்டு இருந்தாலும் ஆலயத் திருப்பணி நிர்வாகங்களில் மாணிக்கவாசகரின் வார்த்தையையும், உள் நிர் வாகத்தில் ஆனந்தையரின் வார்த்தையையும் இதுவரை யாரும் தட்டியதில்லை. அந்த இருவரும் இருசாதி மக்களோடும் ஒத்து நின்று பிரச்சினைகளைச் சரிப்படுத்தி அன்னையை வளம்படுத்திக் கொண்டிருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்த் திருப்பணிக்கென்று சபை அமைக்கப்பெற்று வேலைகள் ஆரம்பிக்கப்பட்டபோது பிரச்சினை முளைவிட்டது. சபையிலே தங்களுக்கு, சரியான பாதிப்பங்கு அதிகாரமும் - பதவிகளும் தரப்படவில்லையென்று ஒரு சாரார் சபையையும் திருப்பணியையும் புறக்கணித்தனர்.

அதுவே சிறந்ததென்று கூறி மேல் சாதிக்காரர் தாமே முன் நின்று எல்லாவற்றையும் நடத்தினர். இந்த சந்தர்ப்பத்தை நல்லமுறையில் பயன்படுத்த வேண்டும் என்பது அவர்கள் திட்டம். இதில் தாமே முன்னின்று தேர் வேலையை ஒப்பேற்றி வைப்பதன் மூலம் ஆலயத்தின் உரிமையில் தாம் ஒருபடி உயர்ந்து விடுவதற்கு வகை உண்டு என்பது அவர்கள் எண்ணம். இதை உணர்ந்த மற்றவர்கள் கடைசி நேரத்தில் அவசரம் அவசரமாகப் பெரும் தொகை நிதி சேகரித்துக்கொண்டு வந்து அதைத் தேர் நிதியில் சேர்க்க வேணுமென்று கோரினர். ஆனால் சபை அதை ஏற்கவில்லை. அவர்களைப் புறக்கணித்துத் தேரைச் செய்து முடித்து வெள்ளோட்டமும் நடத்தியாகிவிட்டது. தம்முடைய பங்கு ஏற்றுக்கொள்ளாதவரையில் தேரில் அம்மனை ஏற்ற விடமாட்டோம் என்று இவர்கள் போராட்டம் நடத்த ஆரம்பித்தனர். தகுந்த ஆயத்தம் இல்லாததால் வெள்ளோட்டத்தை இடையூறின்றி நடக்கவிட்டனர். தேர்த் திருவிழாவிலன்று காலைக்கிடையில் தங்கள் நிதி ஏற்றுக்கொள்ளப் படாவிட்டால் அம்மனைத் தேரில் ஏற்ற முடியாது என்று திட்டவட்டமாக அறிவித்து விட்டார்கள்.

நிலைமை பொலிஸ்வரையும் போகாமல் சமாளித்துவிட வேண்டுமென்ற ஆவலில் ஆனந்தையரும், மாணிக்கவாசகரும் இருசாராரையும் சமாதானப்படுத்த முயன்றனர். பிரச்சினை தீரவில்லை. இந்த நிலையில் நாளை கொடியேற்றம். இன்று இதோ, கிராம சாந்தி நடந்து கொண்டிருக்கிறது. இரவு நேரம் மின் ஒளி விளக்குகளில் ஆலயமும் தேரும் அழகு பொலிய அன்னை கருவறையில் சுந்தர வதனத்துடன் புன்னகை வீசுகிறாள். நாரதர் கலகம் போல் இந்தப் பிரச்சினையும் நன்மையில் முடிந்துவிடும் என்ற நிம்மதியில் அவள் இருக்கிறாளா ?



கோயிலின் பின்புறத்தில் கிராமசாந்தி நடந்துகொண்டிருக்கிறது, ஆனால் கிராமத்தில் சாந்தி நிலவுவதாகத் தெரியவில்லை

எரிமலைதான் குமுறிக் கொண்டிருக்கிறது. கிராமத்தில் மட்டுமா ? மூன்று உள்ளங்களிலும் அல்லவா அந்த எரிமலை குமுறுகிறது. அது வேறுவகையான எரிமலை.—

கொடியேற்றத் திருவிழா விமரிசையாக நடந்துகொண்டிருந்தது. கொடி ஏறியவுடன் அதற்குமேல் நிற்க முடியாமல் அவசர காரியம் ஒன்றிற்காகப் புறப்பட்டார் முருகானந்தம். ஆலயத்தில் யாழினி, பத்மினி இருவருமே காணப்படவில்லை என்பதை அவர் அவதானித்திருந்தார். வழக்கமாக ஆலய விழாக்களில் பெண்கள் பகுதியில் முன் வரிசையில் அழகுப் பதுமைகளாக நின்று மின்னுவதோடு தந்தைக்கு உதவியாக ஆலய நிர்வாகங்களைக் கூடக் கவனித்துக் கொள்கின்ற அந்த இரு செல்வியரும் அங்கு காணப்படாதது சோபை இழந்துவிட்டது போலிருந்தது. ஊர்க்கதைகள்தான் அவர்கள்வராததற்கு முக்கிய காரணம் என்பதைப் புரிந்து கொண்டபோதும் அது பற்றி விசாரிக்கும் நோக்கத்துடன் போகும் வழியில் அவர்கள் வீட்டிலும் நுழைந்தார். இருவரும் சோகப் பதுமைகளாக அமர்ந்திருந்தனர். நடந்த சம்பவங்கள் யாவும் அவருக்குத் தெரியும் என்பதை அவர்களும் அறிவர்.

“என்ன இண்டைக்குக் கோயில்பக்கமே காணேல்லை?” என்று அவர் கேட்டபோது,

“அம்மனைத்தவிர வேறு சில தெய்வங்களையும் சேர்த்துத் தரிசிக்கநேரும். அதைத் தவிர்ப்பதற்காகத்தான் நான்போகவில்லை” என்று யாழினி கூறிவிட்டுத் தலையைக் குனிந்து கொண்டாள். அவர் பத்மினியை நோக்கித் திரும்பியபோது,

“தெய்வங்களாக இருந்து வெறும் கருங்கல்லாக மாறிவிட்டவைகளையும் தரிசிக்க நேரும் என்பதாலே அதைத் தவிர்ப்பதற்காக நான் போகவில்லை” என்று சொன்னாள்.

அந்தப் பதிலில் வருத்தத்தையும் மீறி ஓரளவு குரோதமும் கலந்திருந்தது. யாழினியின் பதிலில் அளவற்ற சோகமும் தவறிழைத்துவிட்ட பச்சாத்தாபமும் கலந்திருந்தன. மாஸ்டருக்கும் கண்கள் கலங்கின. பதில் ஏதும் சொல்லாமல் புறப்பட்டார்.

# 10

**‘துன்பம் நேர்கையில் யாழெடுத்து நீ இன்பம் சேர்க்க மாட்டாயா?’**

தேர்த்திருவிழாவிற்கு முதல் நாள் இரவு. அன்னையின் ஆலய வாசலில் போடப்பட்ட மேடையில் அன்றைய விசேஷ நிகழ்ச்சியாக இசையரசி சந்திரா தேவியின் இன்னிசைக் கச்சேரி நடந்து கொண்டிருந்தது. ஊரே திரண்டு வந்திருந்து அவள் இசையை ரசித்துக் கொண்டிருந்தது.

“ஆசபிமானம் வைத்தாதரிப்பார் என்னை ஆனந்தபைரவி” என்று அவள் பாடிக் கொண்டிருந்த போது யாழினி தான் வழமையாகப் பாடித் தொழுகின்ற அவளுக்குப் பிடித்த அந்தப் பாடலைக்கேட்டு உருகி நின்றாள். அந்த இசையை நேரில் சென்று ரசிக்க முடியாத நிலையை எண்ணி வருந்தியபடி அந்த இரு பெண் உள்ளங்களும் வீட்டில் இருந்தவாறே இசையைப் பருகின.

முருகானந்தம் இந்த நல்ல சந்தர்ப்பத்தை நழுவ விட விரும்பவில்லை. சாரங்கனையும் அழைத்துக் கொண்டு யாழினி வீட்டிற்குப் புறப்பட்டார். இன்று எப்படியும் ஒரு நல்ல முடிவை எடுத்துவிட வேண்டும் என்பது அவர் திட்டம். ஆல மரத்தடியில் தனியாக அமர்ந்து மிகவும் வசதியான கோணத்தில் சந்திராவையும் ரசித்துக் கொண்டு அவள் இசையையும் ரசித்துக் கொண்டு நின்ற தவத்தையும் துணைக்கு அழைத்துக் கொண்டனர். அரைகுறை மனத்தோடு மேடையைத் திரும்பித் திரும்பிப் பார்த்தபடி வந்த தவத்தைப் பார்த்து மாஸ்டர் சொன்னார்.

“உன் சந்திரா எங்கும் ஓடிப் போய் விட மாட்டாள். பிறகும் பார்த்துக் கொள்ளலாம். ஆனால் சாரங்கன் நாளைக்கே



ஊரை விட்டுப் போக வேண்டியவன். அவனுடைய பிரச்சினை தான் முக்கியம்” அவருடைய அந்த வார்த்தை அந்த நேரத்தின் இறுக்கமான சூழ்நிலைக்கு ஒத்ததாக இல்லை. என்றாலும் தவம் அசட்டுச் சிரிப்போடு அவர்களைப் பின் தொடர்ந்தான்.

ஐந்து மௌனங்கள் சில கணங்கள் ஒன்றையொன்று பார்த்துக் கொண்டன. இடையில் மூன்று அனல் மூச்சுக்கள். சாரங்கனை அந்த நேரத்தில் பார்த்த போது அந்தப் பெண்களிடம் எத்தகைய மாற்றம் ஏற்படுகின்றது என்பதை அவதானித்த மாஸ்டருக்கு ஏமாற்றம் தான். அவனைக்கண்ட சந்தோஷமோ அல்லது நடந்து விட்ட காரியங்களால் ஏற்பட்ட வெறுப்போ இனி நடக்கப்போகின்றவைகள் பற்றிய கவலையோ எந்த உணர்ச்சியையும அங்கு படித்தறிய முடியவில்லை. பெண்களின் மனம் ஆழங்காண முடியாத கடல் என்று சொல்வது உண்மைதான் என்று நினைத்துக் கொண்டார். கடைசியில் அவர்தான் மௌனத்தைக் கலைத்தார்.

“இதிலை இருக்கிற ஐஞ்சு பேருக்குமே நடந்து போன நாடகம் முழுதும்தெரியும். நாளைக்கு எப்பிடியும் சாரங்கன் போயாக வேண்டியவன். அதினலை இதிலை ஒளிச்சு மறைக்கிற விஷயம் எதுகும் இல்லாமல் நீங்கள் உங்கடை கருத்துக்களைச் சொல்லுங்கோ. ஒரு நல்ல முடிவை எடுக்கப் பாப்பம்.

தவத்திற்கு, தன் பங்குக்கு எதாவது சொல்ல வேணுமென்று தோன்றியது. “இந்தவரைக்கும் நடந்து போன பிழையளுக்குக்கூட ஒருத்தரை ஒருத்தர் சரியாகப் புரிஞ்சு கொள்ளாததுதான் காரணமாயிருந்திருக்கு. நாங்கள் எப்பவும் மனம் விட்டுப் பேசத் தயங்கிறதாலைதான் பிரச்சினையே தோன்றுது. இப்ப எங்களுக்குக் கிடைச்சிருக்கிற இந்தக் கொஞ்ச நேரத்துக்குள்ளை நீங்க நினைக்கிறதை நினைக்கிறபடி சொல்லுங்கோ” என்றான் அவன்.

இந்த இரு வேண்டுகோளும் சம்பந்தப்பட்ட மூன்று பேருக்குமே சொல்லியதாக அமைந்தன. சில விநாடிகள் மௌனத்தில் கரைந்தன. ஹோலில் போடப்பட்ட மேசையின் அருகில்தான்

சாரங்கன் அமர்ந்திருந்தான். மேசையில் கிடந்த 'குறிஞ்சிமலர்' அவன் கண்களில் பட்டது. அதை அவன் கரங்கள் சாதாரணமாகப் புரட்டின. முதற் பக்கத்தில் அவன் அதனை அன்பளிப்பாகக் கொடுத்தபோது எழுதப்பட்ட வசனங்களுக்குக் கீழ் சில கவிதை வரிகள் எழுதப்பட்டிருந்தன. அவன் அவற்றைப் படித்தான்.

அவன் அதனைப் படித்துப் பார்ப்பதை அவதானித்து அவன் கண் கலங்குவதையும் கண்ட யாழினிக்கும் கண் கலங்கின. அவள் மெல்லச் சொன்னாள்

"தவறு நடந்துவிட்டதென்னவோ உண்மை. சந்தர்ப்ப சூழ்நிலைகள்தான் பெரும்பாலும் தவறுகளுக்குக் காரணமாய் இருக்கின்றன எண்டு நாங்கள் சமாதானம் சொல்லப் பார்த்தாலும், நடந்து முடிஞ்சுபோன இந்தத் தவறிலை பெரும் பங்கு என்னுடையது. அதை ஒப்புக் கொள்ளிற அதே நேரத்திலை நான் அந்தத் தவறுக்குப் பிறகு இந்தக் குறிஞ்சி மலரைப் படிச்ச பொழுது - அதிலை இவர் எழுதியிருக்கிற பொன்மொழியும்தான் எனக்கு சரியான உண்மையைப் புரிய வைச்சுது. அவர் என்னுடையவரல்ல என்று ஏற்கனவே ஓரளவு எனக்குச் சந்தேகமிருந்தாலும்கூட நான் அதை ஊர்ஜிதம் செய்ய நினைச்ச நாளிலையே என்னையறியாமல் தவறு நடந்திட்டுது அதுக்காக நான் இன்னுமொரு பிழையைச் செய்யத் தயாராயில்லை. அந்த ஒருநாள் வாழ்க்கை எனக்குப் போதும். அவரை அவருக்கு உரியவளே பெற்றுக்கொள்ளிறதுக்குத் தடையாய் நான் இருக்க மாட்டன். உண்மையாய்ச் சேரவேண்டியவர்களை நீங்க சேர்த்து வைக்கவேணும்" அவள் விம்மல்களுக்கிடையே இதைச் சொல்லி முடித்த பொழுது கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது. நீண்ட ஒரு பெருமூச்சு அவள் வசனத்துக்கு முற்றுப்புள்ளி வைத்தது.

இப்போது மூவர் பார்வையும் பத்மினியை நோக்கித் திரும்பியது. "நானும் ஒரு தமிழ்ப் பெண்தான். அதுவும் இந்துப் பெண். நான் எப்படி நேர்மையானவளாயிருக்கிறனோ அப்பிடியே எனக்கு வாறவரும் இருக்கவேணும் எண்டு நான் ஆசைப்பட்டன். அப்பிடிப்பட்ட ஒருத்தரை நான் அடைஞ்



சிட்டதாயும் பெருமைப்பட்டன். ஆனால் அவர் தவறிழைச்ச பிறகு - அதுவும் என்னுடைய சகோதரிக்கே அந்தத் தவறைச் செய்தபிறகு நான் அவரோடை வாழத் தயாராயில்லை. அக்கா அவரோடை ஒருநாள் வாழ்ந்த திருப்தி போதும் என்று சொன்னா. நான் அவரைக் கண்ட நாளிலை இருந்து அந்த ஒருநாள்வரைக்கும் மானசிகமாக வாழ்ந்திட்டன். அந்த வாழ்க்கை எனக்குப் போதும். என்னுடையவர் புனிதமானவர் என்கிற அந்த மன எண்ணம் சிதையாமல் இப்படியே வாழ்நாள் பூராவும் நான் வாழ்ந்திடுவன்.

ஆனால் அந்த ஒருநாள், ஒருசில நிமிடங்கள் மூலம் அவளுக்குரியவராகிவிட்ட அவரை அக்காவிடமே சேர்த்து வைக்கிறதுதான் நீங்க செய்யிற நல்ல காரியமாய் இருக்கும்".

மீண்டும் மௌன இருள் கப்பியது. "சாரங்கன் என்ன சொல்கிறாய்" மாஸ்டர் கேட்ட கேள்வி அவன் முகத்தை நிமிர வைத்தது. தவமும் மௌனமாக அவனையே பார்க்கிறான். பெண்களின் தலை நிமிரவே இல்லை.

"எல்லாப் பிழைகளுக்கும் நான் காரணமாயிருந்திட்டன். ஒரு சரியான தீர்மானத்தை எடுக்க முடியாமல் தயங்கிக் கொண்டிருந்ததும், அதுபற்றி வெளிப்படையாய் பேசமுடியாமலிருந்த என்னுடைய பலவீனமும் மட்டுமல்லாமல் கட்டுப்பாடில்லாத என்னுடைய உணர்ச்சிகளும் சேர்ந்து என்னைக் குற்றவாளியாக்கினப் பிறகு நான் சொல்லிறதுக்கு எதுகுமில்லை.

"நான் மனசார பத்மினியைக் காதலிச்சது உண்மைதான். யாழினிக்கு தவறிழைச்சதும் உண்மைதான். இந்த ரீதியிலை நான் ஒவ்வொரு வகையிலை ஒவ்வொருவருக்குத் துரோகம் பண்ணிட்டன். நான் ஒரு பாவி. அதினாலை எனக்குரிய ஒரு வாழ்க்கையை நான் அமைச்சுக்கொள்ளப் போறதில்லை. இண்டைக்கு இருந்தை எடுக்கிற முடிவிலை இந்த இரண்டு பேராலையும் நான் தள்ளி வைக்கப்படுறதுக்கும் நியாயம் இருக்குது. நான் உள்ளத்தாலையும் வாழ்ந்திட்டன். உடலாலையும் வாழ்ந்திட்டன். அது எனக்குப் போதும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆனால், என் ஒருத்தனாலை இந்த ரண்டு பெண்களின் வாழ்க்கையும் அதன்பிறகு இவர்களின் தங்கையவையும் பாதிக்கும் எண்டு தெரிஞ்சு கொண்டு எப்பிடி நான் இந்தளவிலை கை விட்டிட்டு வெளிக்கிட முடியும் எண்டு தான் யோசிக்கிறன்..."

நாலு பேருடைய முகங்களையும் ஒரு முறை பார்த்து விட்டு தன்னுடைய கருத்து தவறான தொரு அபிப்பிராயத்தை எழச் செய்யுமோ என்கிற தயக்கத்துடன் தவம் சொன்னான்,

"இதிலை உணர்ச்சிகளை ஒதுக்கி வைச்சிட்டு லௌகீகரீதியிலை பார்த்தால் எதிர் காலப் பிரச்சினைகளை ஓரளவுக்காவது குறைக்க வேணுமெண்டால் சாரங்கன் யாழினியைக் கலியாணம் செய்கிறதைத் தவிர வேறு வழியில்லை...." அவன் வசனத்தை முடிக்க முதலே,

"என்னுடைய முடிவிலை இனி மாற்றமில்லை. என்னைத்தயவு செய்து நிம்மதியாய் இருக்க விடுங்கோ..."
என்ற யாழினி குலுங்கி அழுதபடி தலையை முழங்கால்களுக்கிடையில் புதைத்தாள். மற்றவர்கள் பார்வை தன் மீது படிவதை உணர்ந்த பத்மினி உறுதியாக

"என்னுடைய முடிவிலையும் மாற்றமில்லை......" அவளும் பொங்கி வந்த கண்ணீரை அடக்க முயற்சித்து உதடுகளைப் பற்களால் கடித்தபடி குனிந்திருந்தாள்.

"எனக்குக் கிடைச்சிருக்கிற தண்டனை நியாயமானது தான் மாஸ்டர். என்னைத் தேடி வந்த செல்வங்களைத் தெரிவு செய்து ஒண்டை எடுககத்தவறி இரண்டிலுமே ஆசை வச்சன், இரண்டுமே என்னை மறுபடியும் நிரந்தரமாய் ஏழையாக்கி விட்டுப் போயிட்டுதுகள் மாஸ்டர்......" அவன் மாஸ்டரின் தோளில் முகத்தைப் புதைத்து விம்மினான்.



ஆலயத்தில்- இசைக்கச்சேரியில் தனியாவர்த்தனம் நடந்து முடிந்து சந்திரா மீராபஜன் பாட ஆரம்பிப்பது கேட்டது. கச்சேரி முடியப் போகிறது. கோயிலின் பின்புறத்தில் தனியான ஓரிடத்தில் நாளைய தேர்த் திருவிழா பற்றிய பிரச்சினையைத் தீர்ப்பதற்கான விவாதங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. அவை இன்னும் முடிந்த பாடில்லை.

இனி அங்கிருப்பதில் பயனில்லை என்றுணர்ந்த மாஸ்டர், "இனி அம்பாள் விட்டவழி. நாங்கள் போட்டு வாறம்" என்று சொல்லிக்கொண்டு சாரங்கனையும் ஆசுவாசப்படுத்தி அழைத்துக் கொண்டு வெளியே இறங்கி நடந்தார். தவமும் பின் தொடர்ந்தான். கடைசி முறையாக விடைபெறும் நோக்கில் தலைநிமிர்ந்த சாரங்கனை நோக்கி அந்தப் பெண்களின் தலை நிமிரவில்லை.

தன்னைப் பார்க்கக்கூட அவர்கள் விரும்பாத அளவுக்கு என்னை இப்போது அவர்கள் வெறுக்கிறார்களோ' என்று அவன் நினைத்தான். ஆனால் அவனை நிமிர்ந்து வழியனுப்புவதன் மூலம் அவனைத் தம் இதயத்திலிருந்து அகற்றிவிட விரும்பாமல் - காலமெல்லாம் அவனுடைய நினைவுகளுடனேயே வாழ்ந்துவிடுகின்ற முடிவுடன் அவர்கள் தம் இருதயத்தையும் கண்களையும் இறுகப் பூட்டிக்கொண்டு உள்ளே அழுது கொண்டிருந்தனர்.

இவர்கள் வாசலில் இறங்க - அவர்களது கடைசித் தங்கை வாசகரின் கடைசி மகள் உள்ளே நுழைந்தாள். அவள் கேட்ட கேள்வி இவர்கள் காதில் விழுந்தது.

"அக்கா நாளைக்குத் தேர்த்திருவிழா நடக்குமே?"

மெல்ல நடந்துகொண்டிருந்த மூவரின் காதுகளிலும் இந்த ஒரு கேள்விக்கான இரு பதில்கள் தெளிவாக விழுந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தெரியாது. வெள்ளோட்டம் மட்டும் நடந்திட்டுக் காலம் பூராவும் கொட்டகையிலை இருக்கிற தேர்களும் இருக்கு" இது யாழினியுடையது.

"வெள்ளோட்டமே நடக்காமல் அரைகுறைத் தேராகவே காலம் பூராவும் இருக்கிற தேர்களும் இருக்கு" இந்தப்பதில் பத்மினியினுடையது.

"துன்பம் நேர்கையில் யாழெடுத்து நீ இன்பம் சேர்க்க மட்டாயா?" என்று இசைக்கச்சேரியின் இறுதிப் பாடலாக எழுந்த 'தேஷ்' ராகப் பாடலைக் கேட்டுக் கண்கள் கலங்கியபடி இந்த இரு பதில்களையும் கேட்டு இதயம் கனக் அந்த மூவரும் ஆலயவாயிலை நோக்கி நடந்து கொண்டிருந்தனர்





# கரைசேரும் கட்டுமரங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரைசேரும் கட்டு மரங்கள்

## 1

ஒழுங்காக அடுக்கி வைக்கப்பட்டிருந்த புத்தகங்கள் கொப்பிகள் அத்தனையும் ஒருசில நிமிடங்களில் மேசைமுழுவதும் பரவியாய் விட்டது. ஆனால், அவள் அவற்றில் ஒரு வசனத்தைத்தானும் படிக்கவில்லை. மறுபடி எல்லாவற்றையும் அடுக்கத் தொடங்கினாள் அவள். புத்தகங்களைப் போலவே நினைவின் இதழ்களையும் ஒழுங்காக்க முடிந்தால் .........

ஜானகி மெல்லத் திரும்பி மற்றவர்களை நோட்டம் விடுகிறாள். காந்தியும், சுதாவும் படிப்பிலே முழுக்கவனமாக இருந்தனர். நீரஜா ஏதோ எழுதிக் கொண்டிருந்தாள். ஏதாவது 'நோட்ஸ்' எழுதிக் கொண்டிருக்கலாம், அல்லது ஜெகந்நாதனுக்குக் காதல் கடிதம் எழுதிக் கொண்டும் இருக்கலாம்.

அவர்கள் மூவரும் சலனமில்லாமல் ஒழுங்ககாத் தத்தமது கடமைகளில் ஈடுபட்டுக் கொண்டிருப்பதைக் காண அவளுக்குப் பொறுமையாகவும் சிறிது கோபமாகவும்கூட இருந்தது. எதிர் காலம் பற்றிய சிந்தனைகள் மனத்திலே குழப்பமான திரைப் படங்களை ஓடவிட்டுக்கொண்டிருந்தன.

ஜானகி அன்றுதான் ஊரிலிருந்து வந்திருந்தாள். அந்த நாலுபேரும் பல்கலைக்கழக மாணவிகள் பல்கலைக்கழகத்துக்கு அருகிலேயே ஓர் அறையை அவர்கள் வாடகைக்கு எடுத்துத் தங்கியிருந்தனர். இது பல்கலைக்கழக இறுதியாண்டு என்பதால் பரீட்சைக்குப் படிப்பதற்குப் பிரயாணங்கள் இடையூறில்லாமல் இருக்கவேண்டுமென்பதற்காக இந்த ஏற்பாடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது மாத்திரமா? இன்றைய நிலையில் வீட்டிலிருந்து புறப்பட்டால் ஒழுங்காகக் கலாசாலைக்கு வந்து சேரமுடியுமா என்பது ஐயத்துக்கிடமான விஷயமாகவல்லவா இருக்கிறது. எந்த நேரமும் என்னவும் நடக்கலாம். திடீரெனப் போக்கு வரத்து வசதிகள் மட்டுமல்லாமல் குடா நாடே ஸ்தம்பிதம் அடையவும் நேரலாம் என்ற திகில் யாருக்கும் இருப்பதால் இந்த ஏற்பாட்டை இவர்களின் பெற்றோரும் வரவேற்றிருந்தனர்.

இன்னும் ஒருவருடம் கூட இல்லை. ஐந்தாறு மாதங்களில் பல்கலைக் கழக வாழ்க்கை முடிந்துவிடும். இந்தக் கடைசிக் காலத்தை கொஞ்சம் சந்தோஷமாகக் கழிக்கலாமென்றால் ............... வீட்டுக்காரர்கள் விட்டால்தானே!

அவர்களும் தான் என்ன செய்வது? வயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொண்டு எவ்வளவு காலத்துக்குத்தான் இருக்க முடியும்? வயதுக்கு வந்துவிட்ட மகள். பல்கலைக் கழகப் படிப்பும் முடியப்போகிறது. எங்கவாது நல்ல இடத்தில் 'மலிவா'கக் கட்டிக் கொடுத்து விடவேண்டும் என்று பெற்றோர் நினைப்பதிலும் நியாயமிருக்கிறது தானே.

அதுவுமல்லாமல் பல்கலைக் கழகம் என்பது பயங்கர மிருகங்களின் குகை என்று நினைக்கப்படும் இந்தவேளையில் – வேட்டைக்காரர்கள் வலை விரித்துக் கொண்டிருக்கும் நேரத்தில் – கலா சாலை மாணவர்களுடன் கதைக்கும் போதே அக்கம் பக்கம் பார்த்துவிட்டுக் கதைக்கவேண்டிய நேரத்தில் – மகளைப் பற்றிய கலக்கம் பெற்றோருக்கு இருப்பது நியாயம் தானே ?

மெல்லிய நீள வெண்டைக்காய்கள் தன் தோளில் படிவதை உணர்ந்து சுய நினைவடைந்த ஜானகி மறுபடியும் சகல புத்தகங்களும் குப்பையாகச் சிதறுண்டு கிடப்பதைக் கவனித்தபடி நிமிர்ந்தபோது நீரஜாவின் பரிவான விழிகள் இவள் முகத்தை அளவிட்டன.

"வட் ஹப்பிண்ட்டு யூ ?" என்று கேட்டபடி குனிந்து மேசையில் முழங்கைகளை ஊன்றிக் கைகளில் நாடியை முட்டுக் கொடுத்தபடி ஜானகியின் விழிகளை ஊடறுத்து நோக்கினாள் நீரஜா.



"நானும் அப்போதை தொடக்கம் பாக்கிறன் ...... என்னவோ ஒவ்வொரு புத்தகமாய் எடுத்துப் பிரிக்கிறதும் மூடி வைக்கிறதும் யோசிக்கிறதுமாய் ...... ஏதோ பிரச்சினையை மனசுக்கை வைச்சுக் குடையிறுய் ஜானகி ...... பிளீஸ் ...... ஸ்பீக் அவுட்".

மெலிந்து நீண்டிருந்த நீரஜாவின் முன்கையினைத்தன் கைகளுக்குள் எடுத்துத் தடவியபடி அவளை நோக்கிய ஜானகி ஒரு நீண்ட பெரு மூச்சைத்தான் அவளுக்குப் பதிலாகக் கொடுத்தாள்.

"கம்! வீ வில் கோ ஃபார் ஏ வோக்!"
நெடுக இதுக்குள்ளை அடைஞ்சு கிடந்தால் விசர் பிடிக்கும். நாங்கள் கொஞ்சம் வெளியாலை போட்டு வருவம் ...... நான் ஒரு தபாலும் போஸ்ட் பண்ண வேணும்"

ஜானகி மௌனமாக எழுந்து உடைமாற்றினாள். குமாரசாமி ஒழுங்கையினூடாகப் புறப்பட்டு பல்கலைக் கழக வீதியில் நடந்து பிரதான வாயிலை அடைந்தனர். தபாலை ஓடிப் போய்ப் போட்டு விட்டு வந்த நீரஜாவைத் தொடர்ந்தாள் ஜானகி. சிவன் கோயிலின் முன்னால் இருந்த புல் வெளியில் அமர்ந்தனர்.

"பிளீஸ் கம் அவுட்! ஒரு நாளும் கவலையள், பிரச்சினையளை மனசுக்குள்ளையே வைச்சுக் குமுறக் கூடாது. ஆருக்காவது செல்லி அழவேணும், இப்ப உனக்கு ஃபைனல் எக்ஸாம் வந்து கொண்டிருக்குது. இந்த நேரத்திலை நீ வீண் பிரச்சினையளிலை மனத்தை அலைய விடக்கூடாது. இப்ப என்ன பிரச்சினை? முகுந்தன்ரை விசயத்திலையா? ஏதேன் கடிதம் வந்ததே?"

நீரஜா அந்த மாணவிகளுக்குள் ஒரு தனிப்பிறவி. எந்த நேரமும் கலகலப்பாக இருப்பதோடு மற்றவர்களையும் அதே போல் இருக்கச் செய்ய முயல்வாள். யாராவது முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டிருந்தால் பிடிக்காது நீரஜாவுக்கு. அவர்களின் பிரச்சினையை அறிந்து அதைத் தீர்ப்பதற்கு உதவுவாள், அல்லது பிரச்சினைகளையே மறந்து கொஞ்சநேரம் சிரித்துக் கொண்டிருக்க வைப்பாள்.

இப்போது ஜானகியின் பிரச்சினையை வெளிக்கொணர முயல்கிறாள். அவளுடைய இழைந்து பழகும் பண்பு ஜானகியை நெகிழ வைத்ததோடு 'முகுந்தன் விசயத்திலா?' என்று கேட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரடியாக - வெளிப்படையாகவே பிரச்சினையைத் தொட்டிழுத்து விட்டதும் சேர்ந்து ஜானகியைப் பேசவைக்கின்றன.

"நாலைஞ்சு மாதமாய்க் கடிதமொண்டும் வரேல்லை நீரஜா அதுக்கிடையிலை வீட்டிலை கலியாணப் பேச்சு நடக்குது ..."

"ஓ...... ஐஸி . . .." என்று யோசனையோடு ஜானகியின் முகத்தில் தன் விழிகளை ஓட விட்டு அவள் அங்கங்களைப் பார்வையால் வருடினாள். குறுகுறுப்பான அவள் விழிகள் தன் அங்கங்களில் தவழ்வதனால் ஒருவித கூச்ச உணர்வோடு தன் முகத்தைத் திருப்பிப் பல்கலைக் கழகக் கட்டிடங்களை நோட்டம் விட்டாள் ஜானகி.

முகுந்தனுக்கும் ஜானகிக்கும் அவ்வளவு நெருக்கமான தொடர்பு இருந்ததில்லை. ஒரே ஊரவர்கள். அடிக்கடி சந்திப்புக்கள் என்ற அளவில் இருவருக்கு மிடையில் ஏதோ ஒருவகைப் புரிந்து கொள்ளல் ஏற்பட்டது. சந்திப்புக்கள் அதிகரித்த போது அது காதலாக மலர்ந்தது. அதற்கிடையில் முகுந்தன் வெளிநாடு போய் விட்டான். வேலை தேடும் இளைஞர்களின் வெளிநாட்டுப் படை எடுப்பில் அவனும் புறப்பட்டுக் கப்பலொன்றில் வேலை செய்யப் போன போது விமான நிலையம் வரை சென்று வழியனுப்பி வைத்தாள் ஜானகி.

காதலையும் கஸ்தூரியையும் ஒளித்து வைக்க முடியாது என்று சொல்வார்கள். ஜானகியின் காதலும் பகிரங்க ரகசியமாகி விட்டது. முகுந்தன் - ஜானகி விஷயம் மெல்ல மெல்லப் பல்கலைக் கழகத் தோழிகளிடையே பரவியது. ஜானகி வீட்டில் கூட இது ஓரளவு தெரிந்த செய்தியாக இருந்தது.

காதல் என்பதை வரவேற்றுக் கைகொடுக்கக் கூடிய அளவுக்குப் பெற்றோர்கள் எல்லோரும் இன்னும் மனவளர்ச்சி அடைந்துவிடாவிட்டாலும், தங்களுடைய சீதனப்பிரச்சினைகள் ஓரளவு குறைந்து விடாதா என்ற நப்பாசையும், ஒரு குமர் கரை சேர்ந்து விடுமே என்ற நிம்மதியும் காரணமாகக் காதலின் எதிர்ப்பு ஓரளவு குறைந்து வருகிறதுதானே.

காதல் நாடகம் முடிவுக்கு வந்து கல்யாணச் சந்தை கூடியவுடன் தமது மகனுக்கு விலை கூற முற்படும் பெற்றோர்களும் இல்லாமல் இல்லை. இந்த நேரம் விரும்பியோ விரும்பாமலோ மௌனமாகி விடுகிற மாப்பிள்ளைக் காதலர்களும் உள்ளனர்,



'இவ்வளவு கேளுங்கள்' என்று காதலனிடம் தூண்டிவிட்டு மெத்தனமாக இருந்து விடுகிற புத்திசாலிக் காதலிகள் கூட இருக்கிறார்கள்.

மகனுக்குப் பிடித்து விட்டால் மறுபேச்சில்லை. சீதனமும் வேண்டாம் சீரும் வேண்டாம் என்று சொல்லி மகனின் காதலியை மருமகளாக வரவேற்றுவிட்டு நாலைந்து வருடம் போன பிறகு 'நீ கொண்டு வந்த சீதனத்தில் நாங்கள் எப்படி வாழ்வது?' என்று குத்திக்காட்டும் மாமியார்களும் இங்கேதான் இருக்கிறார்கள்.

ஜானகியின் பெற்றோரும் மௌனமாகவே அவளது காதலை அங்கீகரித்தபடி முகுந்தனின் சாதி சமயம், இனஞ்சனம் எல்லாவற்றையும் கொஞ்சம் விசாரித்து வைத்திருந்தார்கள். வெளிநாட்டு மாப்பிள்ளை என்பதும் அவர்களுக்கு வலு திருப்தியாக இருந்தது.

ஒரு வருடத்தில் திரும்பி வருவதாகப் போன முகுந்தன் ஓராண்டு முடிவில் ஜானகிக்கு எழுதிய கடிதத்தில் மேலும் ஒரு வருடம் கழித்தே தான் நாடு திரும்பப் போவதாக எழுதியிருந்தான். இன்னும் ஒரு மாதத்தில் முகுந்தன் போய் இரண்டாவது வருடம் முடியப்போகிறது. ஆனால் கடந்த மூன்று நாலு மாதங்களாக அவனிடமிருந்து ஜானகிக்குக் கடிதம் ஏதுவும் வரவில்லை.

ஜானகியின் மனக் கோட்டைகள் யாவும் ஓரளவு ஆட்டம் காணத் தொடங்கின. ஜானகியும் முகுந்தனும் சந்தித்து மனம் விட்டுப் பேசியதோ பழகியதோ மிகக்குறைவு. ஒருவரை ஒருவர் தமக்குள்ளே நேசிக்கத் தொடங்கிய அவர்கள் காதல் பின்னர் கடிதமூலம் தழைத்து வளர்ந்தது. ஜானகியால் முகுந்தனை மறக்கவே முடியவில்லை. அவள் அவனை மனதார நேசித்தாள்.

இதோ விரைகின்றன மாதங்கள். இதோ நாள் நெருங்கிவிட்டது. இதோ என் முகுந்தன் வரப்போகின்றான். வந்தவுடன் தன்னிடம் ஓடிவருவான் என்ற கற்பனையுடன், அப்படியொரு அசைக்கமுடியாத நம்பிக்கையுடன் காத்திருந்தாள் ஜானகி.

கனவுகளே வாழ்க்கையாக, கற்பனையே துணையாக வாழ்வதற்கு ஒரு கன்னிக்கு மட்டுமே முடியும். அவளுடைய பெற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரேருக்கு அது முடியுமா? அவர்கள் முன் அவள் ஒரு பிரச்சினை அவர்களது கனவுகள் வரண்டவையாகவே அமைய முடியும் அவர்களது கற்பனைகள் பயப்பிராந்திகளினுல் ஆனவைதானே அவநம்பிக்கைகள்தான் அவர்களைப் பயமுறுத்துகின்றன.

வெளிநாட்டுக்குப் போய் வருபவன் எப்படி வருவான் என்பது சொல்ல முடியாது. நல்ல படியாகத் திரும்பி வந்தாலும் அவனுடைய செல்வச் செழிப்புடன் இவர்களது ஏழ்மை நிலை பொருந்த முடியுமா?

"இவ்வளவு சீதனம் கொண்டுவா" என்று அவன் கேட்டால் அல்லது அவனை மீறி அவனது பெற்ருேர் வற்புறுத்தினுல் என்ன செய்வது? இந்த நிலையில் அவர்கள் ஜானகிக்கு அவசரமாகத் திருமணம் செய்யும் ஏற்பாடுகளில் ஈடுபடலாயினர்

"சொல்லு ஜானகி, எங்கை கலியாணம் பேசுப்படுகுது? நீரஜா தூண்டிக் கேட்டாள்.

"முரளி எண்டு ஒருத்தர் . கொழும்பிலை ஏதோ கொம்பனியிலை நல்ல உத்தியோகமாம். இரண்டாயிரத்துக்குக் கிட்டச் சம்பளம். எங்களுக்கும் ஏதோ வழியிலை சொந்தக்காரர் தான் ..."

"அவருக்கு உங்கடை காதல் விவகாரம் தெரியாதே?"

பெரும்பாலும் தெரிஞ்சிருக்கும். ஆனுல் அதைப் பெரிசுபடுத்த அவர் விரும்பமாட்டார். எங்கடை குடும்பத்திலை அவருக்கு வலு மரியாதை."

"இஞ்சைபார் ஜானகி, இந்த முரளி நல்ல உத்தியோகத்திலை இருக்கிறவர், உங்கடை செந்தக்காறர். உன்னுடைய பிரச்சினை தெரிஞ்சும் கூட உன்னைப்பற்றிப் பிழையாய் எடுக்காமல் தானுய்க் கலியாணத்துக்குச் சம்மதிக்கிருர். அங்கினலை உன்னிலை அவருக்கு எவ்வளவு அன்பு இருக்கவேணும்?"

நீரஜாவின் கேள்வி ஜானகியிடம் எந்த சலனத்தையும் ஏற்படுத்தவில்லை, மௌனமாக நகங்களை மாறி மாறிக் கடித்தபடி எங்கோ வெறித்து நோக்கிக் கொண்டிருந்தாள்.

"ஜானகி, உனக்குத் தெரியுமே .... ஒரு பொன்மொழி சொல்லிறவை ... நீ காதலிக்கிறவரைவிட உன்னைக் காதலிப்பவரைக் கல்யாணம் செய்வது மேல்" எண்டு. அதிலை எவ்வளவு உண்மை இருக்குது தெரியுமே - இந்த முரளி உன்னை விரும்பிறதாலை அவர் உன்னைப் பூப்போலை வைச்சுப் பாப்பர் தானே."

"என்னுலை முகுந்தனை மறக்க முடியேல்லையே நீரு."

"முகுந்தன் அவ்வளவு தூரம் உன்னைக் கவர்ந்திருக்கலாம். ஆனுல். அவர் உன்னை எவ்வளவு தூரம் விரும்பினுர் எண்டதையுமல்லோ யோசிக்க வேணும் உனக்கு அவர் நாலைஞ்சு மாசமாய்க் கடிதமே போடேல்லை, உன்னுலை அவரை மறக்க முடியேல்லை என்பது மெய். ஆனுல், அவர் வலு சுலபமாக உன்னை மறந்திட்டார்தானே.

"இனி அவர் எப்ப வாருரோ தெரியாது.. .. இந்த நிலையிலை அவர் உனக்கு நல்லொரு வாழ்க்கையைத் தருவார் எண்டு நீ நினைக்கிறியோ ஜானு?"

நீரஜாவின் கடைசிக் கேள்வி ஜானகியைக் கொக்கி போட்டு நிமிர்த்துகிறது. ஆழ்ந்த சிந்தனையோடு நீரஜாவையே பார்த்துக் கொண்டிந்தவள்,

"இன்னுமொரு கொஞ்ச நாள் அவரை எதிர்பார்க்கிறது நல்லது போலை தோன்றுது எனக்கு. எங்கடை சோதனைக்கும் இன்னும் கொஞ்ச நாள்தானே இருக்கு ...... அது முடியுமட்டும் பார்க்கலாமெண்டால்........."

சில கணம் இடைநிறுத்தி ஆழ்ந்த சிந்தனையில் இருந்தவள் தொடர்ந்தாள்.

"சாதகத்திலை ஏதோ பிரச்சினையாம். இப்ப செய்யாட்டில் இனி நாலைஞ்சு வரியத்துக்கு என்ரை சாதகத்திலை கலியாணப் பலன் இல்லையாம். அதுதான் வீட்டுக்காரர் அவசரப்படுகினம்."

"எனக்கென்னவோ ஜானகி, வலியவாற வாழ்க்கையை ஏற்கிறது நல்லது போலைபடுகுது. யோசிச்சுச் செய் ...... என்னுல், இந்த யோசனையிலை படிப்பைப் பாழ்படுத்தாதை இத்தனை வரியம் மினைக்கெட்டது வீணுய்ப்போகும்."

என்று சொல்லிக்கொண்டு நீரஜா எழுந்தாள். ஜானகியும் மௌனமாக எழுந்து அவளைப் பின் தொடர்ந்தாள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2

ஜானகி போய் ஒரு வாரமாகி விட்டது. கடந்த வார இறுதியில் ஊருக்குப் போய் வருவதாகச் சொல்லிப் போனவளிடமிருந்து எந்தவித தகவலையும் காணவில்லை. அறைத் தோழிகள் மூவருக்கும் வியப்பாகவும் கவலையாகவும் இருந்தது. என்ன நடந்ததோ என்ற திகில். கடிதம் எழுதவும் யோசனையாக இருந்தது. வீட்டில் ஏதாவது பிரச்சனை நடந்திருந்தால் இவர்களின் கடிதம் இன்னும் விபரீதத்தை ஏற்படுத்தி விடலாம்

என்ன நடந்திருக்கலாம் என்று விதவிதமான கற்பனைகளைத் தமக்குள்ளேயே வளர்த்துக் கொண்டிருந்தார்கள் இவர்கள். ஒருவேளை முகுந்தன் திடீரென வந்திறங்கியிருக்கலாம் அல்லது பெற்றோரின் வற்புறுத்தலால் முரளியுடன் திருமணமே நடந்திருக்கலாம். அல்லது ஜானகி ஒருவேளை தற்கொலை செய்திருப்பாளோ?.... இந்த நினைவுகளே அவர்கள் நெஞ்சைக் குடைந்த வண்ணம் இருக்க நாட்கள் நத்தையாக நகர்ந்தன.

அடுத்த வாரத்திலும் இரண்டு நாட்கள் கழிந்தன: அன்று மாலை 'லெக்சர்' முடிந்து நீரஜாவும், சுதாவும், காந்தியும் அறைக்கு வந்த பொழுது அங்கே ஜானகி அவர்களுக்காகக் காத்திருந்தாள். வியப்பும் ஆர்வமும் பொங்க அவளை நோட்டம் விட்டவர்களுக்கு அவளுடைய பொலிவிழந்த முகம் வருத்தத்தைக் கொடுத்தது.

சோகமே வடிவெடுத்தவளாக - எதையோ பறிகொடுத்தவள் போல் - மௌனமாகப் புன்னகைத்த அவளருகில் வந்த நீரஜா அவள் கைகளைப் பற்றினாள். திடீரென ஏதோ



நினைத்தவளாக அவளது இடதுகையை மேலே தூக்கி விரலை நோக்கினாள். 'முரளி' என்று சின்னஞ்சிறு அழகிய எழுத்துக்கள் பொறித்த புதிய மோதிரம் மின்னியது.

"கொங்கராஜுலேஷன்ஸ் ஜானு" என்று கலகலப்பாகச் சொல்லி அவள் கையைக்குலுக்கி அவளை மகிழ்விக்க முற்பட்டாள் நீரஜா. மற்றவர்களும் அவளைச் சூழ்ந்து கைகளைப் பற்றித் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்தனர். ஆனால், நீரஜாவின் தோள்களில் முகம் புதைத்துக் குலுங்கினாள் ஜானகி.

எந்தவித முடிவையும் சுயமாக அவள் எடுக்கமுடியாத நிலையில், முகுந்தன் விஷயத்தில் அவளுக்கு எந்த விதமான நம்பிக்கையும் ஸ்திரப்பட முடியாத நிலையில். வீட்டுக்காரரின் தவிர்க்க முடியாத நெருக்கடி நிலையில், வேறுவழியின்றி முரளியுடனான திருமண ஒப்பந்தத்தில் அவள் கையொப்பமிட்டாள். மிக எளிமையான முறையில் திருமணப் பதிவு நடந்தது. பரீட்சை முடிந்த மறு மாதத்திலேயே திருமணம் நடத்துவதாகத் தீர்மானித்தனர்.

பழைய நினைவுகளைக் களைந்து விடவழிதெரியாமலும், புதிய உணர்வுகளை வேரூன்றச் செய்ய வகையறியாமலும் தத்தளித்தாள் ஜானகி. நெருங்கி வருகிற பரீட்சையும், சூழ்ந்து நிற்கும் படிப்பின் அவசரமும் மெல்ல மெல்ல ஜானகியை மாற்ற முற்பட்டுக் கொண்டிருந்தன.

அவ்வப்போது முரளி அவளைத்தேடி அங்கு வந்தான். புத்தம் புதிதாகப் பொங்கிப் பிரவகிக்கின்ற அவனது காதல் உணர்வுக்கு இவளது சோக வடிவம் தடைபோடப் பார்த்தது. ஆனால் முரளி மனிதத்துவம் நிறைந்த மனிதனாக - பொறுமையோடு அவளை அணுகினான். அவளை அவளுடைய பலத்துடனும் பலவீனத்துடனும் முழுமையாகவே ஏற்றுக் கொள்ளும் மனப் பக்குவத்தை அவன் பெற்றிருந்தான்.

"முகுந்தனை என்னாலை மறக்க முடியேல்லையே முரளி" என்று அவனிடமே சொல்லி அவன் மார்பில் முகம் புதைத்துக் குமுறி அழுகின்ற அவளை ஆதுரத்தோடு அணைத்துத்தேறுதல் சொல்வான் முரளி. எந்தவிதமான கோபமோ பொறுமையோ இல்லாமல்,

"ஜானு, சந்தர்ப்பம் சூழ் நிலையள் இப்படி ஆயிட்டுது. ஒரேயடியாய் அவனை மறந்திடு எண்டு நான் சொல்லேல்லை. அவனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்ரை ஒரு பழைய நண்பனாக நினைச்சுக் கொள்ளு. படிப்படியாய் உன்ரை இதயத்திலை எனக்கும் ஒரு கொஞ்ச இடம்தா. போகப் போகச் சரியாயிடும்" என்று முரளி சொல்லும் போது, தன்னிடம் அவன் யாசிக்கின்ற அந்தப் பரிபூரணமான அன்பை முன்னமே பறி கொடுத்து விட்டதற்காக - அவனுடைய பாதங்களில் முழுமையாகச் சரணாகதியடைய முடியாமல் இருப்பதற்காக மனம் கசிவாள். முதலிலேயே முரளியைச் சந்திக்காதிருந்த தன்னுடைய துரதிர்ஷ்டத்தை எண்ணி வேதனைப் படுவாள்.

முரளியின் இந்த மனிதத்தன்மைக்காகவாவது தான் தன்னை முழுமையாக மாற்றிக் கொள்ள வேண்டும் - அந்தப் பழைய பென்சிற் கோடுகளை அழித்து விடவேண்டுமென்று யோசிப்பாள். முகுந்தன் என்கிற அந்த எழில் வடிவம் அழியாத வண்ணச் சித்திரமாகத் தன்னுள் ஒட்டிக்கொண்டிருப்பது ஏன்?

முரளியின் பெருந்தன்மையை நினைத்துப் பூரித்துப்போய் விடுகின்ற கணங்களில் அவனுடைய விஸ்வரூபத்தின் நிழலையாவது தனது இதயத்தில் புகுத்த வேண்டுமென்று யோசிப்பாள்.

இரண்டு விதமான மன நிலைகளுக்கிடையில் தத்தளித்தாள் ஜானகி. ஸ்டீவன்ஸனின் இரட்டை மனிதன் நாவலில் வரும் கதாநாயகன் மாதிரித் தன்னுள் தான் முரண்பட்டு நின்றாள். மிஸ்டர் ஹைட் விழித்தெழுந்தால் டொக்டர் ஜெகில் மறைந்துவிடுகிறார். ஜெகிலாகவே இருக்க வேண்டுமென்று தான் அவள் நினைக்கிறாள். ஆனால் அடிமனம்.... ? அடிக்கடி முரளியோடு பேசிப் பழகிப் பழைய நிலையை மெல்ல மெல்ல மறக்க முயன்று கொண்டிருந்தாள். முரளியுடன் வெளியே புறப்பட்டு சினிமாவுக்கும் கடைத்தெருவுக்கும் போய்வரத் தொடங்கினாள்.



# 3

அறைக்குத் திரும்பிய ஜானகி திடுக்கிட்டாள். அறை வாசலில் அவளுக்காகக் காத்திருந்தவன்-முகுந்தன்! ஒரு கணம் திகைத்துப் போய் நின்று விட்டாள். பழைய குறும்புத்தனமான பார்வையும் கொஞ்சும் குறும் சிரிப்புமாக நின்ற அவன் அவள் நடந்து வரும் அழகை விழுங்கிக் கொண்டிருந்தான் அவன் விழிகள் அவள் உடலெங்கும் தவழ்ந்தன. அருகில் இவள் நெருங்கி வந்ததும் கையை எட்டிப் பிடிக்கப்போனான். இவள் அவசரமாக உள்ளே ஓடிப்போய்ப் படுக்கையில் விழுந்தாள். தலையணையில் முகம் புதைத்துக் குமுறிக் குமுறி அழுதாள் - விபரம் புரியாமல் திகைத்து நின்றான் முகுந்தன்.

என்ன ஜானு! என்ன நடந்தது? என்று ஆதரவுடன் கேட்டபடி அருகில் வந்து ஜானகியின் தோள்களில் கை வைத்தான். சரேலென்று கையை விலக்கிச் சற்று எட்டவிலகி நின்ற அவளை வியப்புடனும் வேதனையுடனும் பார்த்தபடி,

"ஜானகி, நான்தான் வந்திட்டனே. இனி ஏன் அழுகை? அழுகையை விட்டிட்டு என்ன பிரச்சினை எண்டு சொல்லு! நானும் எனக்கு நடந்த கஷ்டத்தைச் சொல்லிறன் ........"

அடிபட்ட வேங்கையைப் போல் திரும்பிய ஜானகியின் கண்களைக் கண்டு பயந்தான் முகுந்தன். கண்ணீர் மல்கிச் சிவந்து தோன்றிய அந்த விழிகள் அவனைத் துளைத்தெடுத்தன.

"இப்போ ஏன் இஞ்சை வந்தியள்?"

"என்ன ஜானகி இது? நான் என்ரை ஜானகியை விட்டிட்டு வேறை எங்கை போவன்?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓ! எத்தனை சங்கடமான நிலை இது. எனக்கு மட்டுமல்லாமல் இவருக்குக் கூட எத்தனையோ ஏமாற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது இந்த நிலைமை. "நான் என்ரை ஜானகியை விட்டிட்டு வேறை எங்கை போவன்?" என்று கேட்கிறானே இவன். இவனுடைய நம்பிக்கைக்கு நான் துரோகமல்லவா செய்து விட்டேன் . பாவம் இவர் எப்படி இதனைத் தாங்கப்போகின்றார்?

முகத்தைக் கைகளால் மூடிக்கொண்டு கண்ணீர் உகுத்தாள் ஜானகி. முகத்தின் மேல் மூடியிருந்த அந்தக் கைகளில், அந்த விரலில் ஓ! அது என்ன? 'முரளி' என்ற எழுத்துக்களுடன் மின்னிய அந்த மோதிரம் .... ...

'ஜானகி!' என்று மறுபடி அழைத்தான் முகுந்தன். அவன் குரலில் ஏமாற்றம், வேதனை, வெறுப்பு. விரத்தி யாவும் குமிழியிட்டன.

"என்னை ஏமாத்தி இந்த நிலைக்குத் தள்ளிப்போட்டு இப்ப வந்து ஏன் என்னைச் சாகடிக்கிறீங்கள் முகுந்தன்?"

"இல்லை ஜானகி. நான்ஏமாத்தேல்லை. ஏமாந்திட்டன். நீதான் என்னை ஏமாத்திட்டாய். திடீரென்று வந்து உன்னைத்திகைக்க வைக்கோணுமெண்டு கடிதம் கூடப்போடாமல் ரண்டரை மாசத்துக்கு முன்னமே வெளிக்கிட்டனான். இடையிலை கப்பல பழுதுபட்டு எங்கெங்கையோ அலைஞ்சு இஞ்சை வந்திறங்கின உடனையே உன்னட்டை ஓடியந்தன் ஜானு. நீ ...... நீ இப்படி என்னை மோசம் பண்ணீட்டாய் . முகுந்தன் கண்கலங்கினான். இங்கு நடந்ததை - எதுவும் செய்ய இயலாத நிலையில் தான் சிக்கி வேதனைப் படுவதைச் சொன்னாள் ஜானகி.

அறைக்குத் திரும்பி வந்த தோழிகள் மூவரும், முகுந்தனைக்கண்டு திகைத்தனர். என்ன நடக்கப் போகிறதோ என்று பயந்த வாறு மெல்ல நழுவி விட்டனர்.

ஜானகி மிகவும் பயந்தாள், தன் இதயத்தை எண்ணி அவள் பயந்தாள், இனி என்ன செய்வது. அழிந்து கொண்டிருந்த வண்ணச் சித்திரம் மீண்டும் புதுப்பிக்கப் படுகிறது. இறந்து கொண்டிருந்த மிஸ்டர் ஹைட் மீண்டும் உயிர் பெற்றுக் கொண்டிருக்கிறானே?



முகுந்தன் போய் விட்டான். அவன் போன நேரம் தொடக்கம் மௌனத்தையே அரணாக்கி மறுகிக் கொண்டிருந்தாள் ஜானகி. வாழ்க்கையே சூனியமாகி விட்டதாகக் கலங்கித் தவித்தாள்.

மனத்தராசு நிறுத்தப்படுகிறது. ஒரு தட்டிலே முகுந்தன் மறுதட்டிலே முரளி. தட்டு சீசோ ஆடுகிறது. முள் துடிக்கிறது. ஜானகியின் இதயம் வலிக்கிறது. நெஞ்சைப் பிடித்துக் கொள்கிறாள். இவனா, அவனா? இதயம் கவர்ந்தவன் இவன். கரம் பற்றியவன் அவன். உள்ளமா? உடலா? கைவிரலில் மோதிரம் உறுத்தியது. காரணமில்லாமல் அதனை உறுத்துப் பார்த்தாள் முரளி ... முணுமுணுக்கின்ற உதடுகளைத்தடுக்க முடியவில்லை. அவனது ஆளுமை அவளைக் கவிந்துகொள்கிறது. தன் முன்னே, நின்று புன்னகைக்கும் அந்த மென்மையானமுகம் ...... கண்ணூடியினூடாக நோகாமல் நோக்கும் அந்தக் கருணை விழிகள் ......அவள் பார்த்துக் கொண்டிருக்கும்போதே மெல்லமெல்ல வளர்ந்துகொண்டே போகும் அவனது விஸ்வரூபம் ...... ஓ அன்று பகவான் கிருஷ்ணன் அர்ச்சுனனுக்குக் காட்டிய விஸ்வரூப தர்சனம் என்பது இதுதானோ? மேலே உயர்ந்து கொண்டிருக்கும் அவனது தோற்றம் ... .. அவள் விழிகளும் மேலே படிப்படியாக உயர்ந்து கலங்கித்துளும்பி ...... பார்வையை நீர்த்திரை மறைத்ததோது அந்த நீர்த்திரையில் ஒளிரும் அந்தச் சின்னஞ்சிறிய வண்ணச் சித்திரம் ...... அதில் தெரியும் குறும்புச் சிரிப்பு ...... நளினமான அந்த விழிகள் ...... முகுந்தனின் அந்த உருவம் எத்தனை இலகுவாக அவளது இதயத்துள் நுழைந்து விடுகிறது. நாடி நரம்புகளில் ஊடுருவி, உணர்வுகளுள் பரவி உற்சாகமூட்டும் அந்த அன்பு, கிறங்கவைக்கும் அந்த நேசமும் நெருக்கமும் .....

ஆண்டவனே எனக்கேன் இந்தச் சோதனை? உள்ளம் முழுதும் முகுந்தனை நாடினாலும், உடல் இந்த முரளிக்குத்தானே சொந்தம்.

அவன் இன்னும் இந்த உடலை ஆளத்தொடங்க வில்லைத் தானே? உடலையும் முகுந்தனுக்கே சொந்தமாக்கி விட்டால்? அதெப்படி முடியும்? கைவிரல்களைப் பற்றி அந்த மோதிரத்தை அணிவித்த கணத்திலிருந்து அவள் அவனுக்குரியவள்தானே! உள்ளத்தைப் பற்றி உலகம் என்ன கவனிக்கப் போகிறதா? சட்டம் சொல்வதைத்தான் உலகம் கேட்கும். சட்டம் உடலைப் பற்றித்தான் சொல்லும். அப்படியானால் ......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதவு தட்டும் ஓசையில் திடுக்கிட்டுச் சுயநினைவு கொண்ட ஜானகி கதவைத் திறந்தாள். அறைத் தோழிகள் மூவரும் வாசலில் பதற்றத்துடன் நுழைந்தனர். அவர்களது வெளிறிய முகங்களைப் பார்த்து இவள் திடுக்கிட்டாள். இவளுடைய வெறித்த பார்வையை அவர்கள் வேதனையோடு உள்வாங்கிக் கொண்டனர்.

"கொழும்பிலை கலவரமாம்" நடுக்கத்துடன் சொன்ன காந்தியின் கரத்தை அழுத்தினாள் நீரஜா. சமய சந்தர்ப்பம் தெரியாமல் ஜானகியைக் குழப்பத்தில் ஆழ்த்துவதை அவள் விரும்பவில்லை. ஆனால், நிலைமை தவிர்க்க முடியாதது. மெல்ல விஷயத்தை விளக்கினாள் நீரஜா.

ஐம்பத்தெட்டும் எழுபத்தேழும் பழங்கதைகளல்ல. மீண்டும் ஒரு இனக்கலவரம் நாடெங்கிலும் புகையத்தொடங்கி விட்டது. பல்லாயிரம் அனுமார்களின் வாலில் இலங்கையரசன் கொழுத்தி விட்ட நெருப்பு லங்கா தகனத்தை 'ஒழுங்காக' நடத்தியது. மீண்டும் இலங்கை மக்கள் பலர் இலங்கையிலேயே அகதிகளாகி ....... -

மெல்ல மெல்ல ஏற்கனவே புகைந்து கொண்டிருந்த பிரச்சினைகள் இவர்களுக்கு முதலே தெரிந்திருந்ததுதான். ஆனால் இப்படி மீண்டும் ஒரு எழுபத்தேழாக இது உருமாறும் என இவர்கள் நினைத்திருக்கவில்லை. இப்போது வெளியே போய் வந்த மூன்று தோழிகளும் நிறையக் 'கதை' களைக் கொண்டு வந்திருந்தனர். கதைகளா அவைகள் ?

அங்கே அப்படி நடந்ததாம். இங்கே இப்படி நடந்ததாம். எத்தனை பேர் கொல்லப்பட்டனர். எத்தனை வாகனங்கள் எரிக்கப்பட்டன. எத்தனை கட்டடங்கள் நொறுக்கப்பட்டன, எத்தனை பெண்கள் கற்பழிக்கப் பட்டார்கள். என்று ...... நீண்டு கொண்டு போன செய்திகள் ......

தான் தனக்குள்ளே மூழ்கித் தனது துயரங்களையே நினைத்து இங்கே அடைந்துகிடந்த வேளையில் வெளியில் எத்தனை சம்பவங்கள் நடந்துவிட்டன. ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொருவேர் சொன்னவைகள் என விதவிதமான வேதனைச் சம்பவங்களை நீரஜா சொன்னாள்.

தமிழனுக்கென்று நடந்த அநியாயத்தைப் பற்றிப் பேசிய கையோடு ஒவ்வொருவரும் தனக்குத் தனக்கென்று நேரக்



கூடிய கஷ்ட நஷ்டங்கள், தங்கள் உறவினர்களைப் பற்றிய கவலைகள் பற்றியும் பேசிக்கொண்டனர்.

காந்தி தன் சிறிய தகப்பனார் கொழும்பிலும், மாமா குடும்பத்தினர் பண்டாரவளையிலும் என்ன கஷ்டப்படுகிறார்களோ என்று கவலைப்பட்டாள். நீரஜா தனது காதலனை நினைத்துக் கொண்டாள். "ஜெகனுடைய தமையனும் பெண்சாதியும் வெள்ளவத்தையிலைதான் இருக்கிறவை.........?' என்று அவள், இழுத்தபோது, சுதா,

"இந்தமுறை வெள்ளவத்தையும் சரியான மோசமெண்டல்லே கதைக்கினம்" என்றாள் தொடர்ந்து,

"என்ரை அண்ணியின்ரை தேப்பன் எஸ்ரேற் பக்கத்திலை தான் எங்கையோ...... .. ஆள் சரியான சுகமில்லாத ஆள் நல்ல காசு பணத்தோடை இருக்கிறார். படுபாவியள் என்ன பண்ணினாங்களோ" என்றும் வேதனைப்பட்டாள்.

மௌனமாக இருந்த ஜானகி "கொட்டாஞ்சேனைப் பக்கம் என்ன மாதிரியெண்டு தெரியாது என்ன?" என்று கரகரத்த குரலில் கேட்டாள். அவள் விழிகள் கலங்கத் தொடங்கியிருந்தன. அப்போதுதான் திடீரென முரளியைப்பற்றி நினைத்துக் கொண்ட மூவரும் அவளை அனுதாபத்துடன் பார்த்தனர்.

அப்போது முகுந்தன் பரபரப்போடு அங்கு வந்து சேர்ந்தான் பரபரப்போடும் களைப்போடும் வந்த அவன் "கலவரம் பற்றிக் கேள்விப்பட்டனியளே?" என்று பொதுவாகக் கேட்டான். அவனை ஒருதடவை நிமிர்ந்து பார்த்துவிட்டு மௌனமாகத் தலை குனிந்தாள் ஜானகி. நீரஜா தான் அவனுக்கு விடை சொன்னாள்.

"இப்ப அதைப்பற்றித்தான் கதைச்சுக் கொண்டிருந்தனாங்கள் .........."

"ஜானகி, முரளியின்ரை அட்ரஸ், டெலிபோன் நம்பர் ஏதேன் இருக்கே?" என்று நேரடியாக விஷயத்துக்கு வந்தான் முகுந்தன்.

எழுந்து மேசையருகில் சென்ற ஜானகி கொப்பியொன்றிலிருந்து முரளியின் விலாசம் முதலியவற்றை எழுதிக் கொண்டு வந்து கொடுத்தாள். கலங்கியிருந்த அவளது கண்களைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்க அவனுக்கு வேதனையாக இருந்தது. எந்த அளவுக்கு அவள் தன்னைக் காதலித்திருந்தாலும் கணவன் என்று சட்டப் படி வந்துவிட்ட முரளிக்காக அவள் துடிப்பதை அவனால் உணர முடிந்தது, கீழைத்தேயப் பண்பாட்டிற்கே உரிய அந்தப் பெருமையை வியந்துகொண்டு சிறிது நேர உரையாடலின் பின் அங்கிருந்து புறப்பட்டான் முகுந்தன்,

ஜானகியின் மனப் போராட்டத்தையும், இரட்டை மன நிலைகளையும், அந்தச் சிறிது நேர உரையாடலில் முகுந்தனால் உணர முடிந்தது. அவளுக்கு ஆறுதல் சொல்லவும் முடியாத நிலை அவனுக்கு. தான் ஒரு முடிவுக்கு வந்து அவளது அமைதியான வாழ்க்கைக்கு வழிசெய்ய வேண்டும் என அவன் உணர்ந்தான். முரளியை அவன் நேரில் சந்தித்துப்பேசலாமா வேண்டாமா என்ற இரட்டை மனநிலை அவனுள்ளத்தில் போரை நிகழ்த்தியது. இதுபற்றி ஆழ்ந்து சிந்திக்க முடியாமல் இப்போது அவனுக்கு நிறைய வேலைகள் இருந்தன.

கப்பலில் ஓடியாடி வேலைசெய்து பழகிப் போயிருந்த அவனது கைகளும் கால்களும் துறுதுறுத்தன. இதயம் ஏவிக் கொண்டிருந்தது. செய்! அல்லது சேத்து மடி! சொந்தச் சகோதரர்களுக்கு இன்னல் நேர்ந்திருக்கும் இந்த நேரத்தில் அவர்களுக்காக அவன் ஏதாவது செய்தாக வேண்டும் என முனைந்து நின்றான், வெளியூரிலிருக்கும் உறவினர்களுக்கு என்ன நடந்தது என்பதையே அறிய முடியாமல் இங்கு தவித்துக் கொண்டிருந்தவர்களுக்கு ஆறுதல் சொல்லி அந்த விபரங்களை அறிந்து உதவுவதில் ஈடுபட்டான். அகதிகளாக வரத் தொடங்கியிருந்த பலருக்கும் வேண்டிய உதவிகளைச் செய்து தன் மன உளைச்சல்களைப் போக்கிக் கொண்டிருந்தான்.

முரளியைப் பற்றிய விபரங்களையும் சேகரிக்க முயன்றான். கடைசியில் கப்பல் மூலம் காங்கேசன்துறையில் வந்திறங்கிய அகதிகளில் முரளியும் ஒருவனாக வந்துள்ளதாகக் கேள்விப்பட்டு நிம்மதியடைந்தான், தகவலை ஜானகிக்கு அனுப்பி விட்டு அவன் காங்கேசன்துறைக்குப் புறப்பட்டுவிட்டான்.

காங்கேசன்துறையில் அவன் அகதிகளுக்கான உதவிகளை விரைந்து செய்து கொண்டிருக்கையிலே முரளியை அப்போதுள்ள நிலைமையில் சந்திப்பதா இல்லையா என்று யோசித்துக் கொண்டிருந்தான்.



கொழும்பிலேயே ஒரு சொந்த வீட்டை வாங்கி அங்கேயே தனது முழு வாழ்க்கையையும் அமைத்துக் கொண்டிருந்தவன் முரளி. யாழ்ப்பாணத்தில் நெருங்கிய உறவினர்கள் என்றோ சொத்து சுகங்கள் என்றோ எதுவித பிடிப்புமில்லாமல் தலைநகர் வாழ்க்கையில் ஊறி விட்டிருந்தது அவனது குடும்பம். இப்போது முரளியும் அவனது குடும்பத்தினரும் எதுவு மற்றவர்களாக – அகதிகளாக வந்திறங்கி முகாமிலேயே இருக்கின்றனர். இந்த நிலையில் "நான்தான் உங்கள் மனைவியின் முன்னாள் காதலன்" என்று தன்னை அறிமுகம் செய்து கொண்டு எப்படி அவன் முன் போவது? இந்தத் தயக்கத்தினால் முகுந்தன் எட்டவே நின்று கொண்டான்.

முரளி அகதியாய் வந்திறங்கியிருப்பதை ஜானகியின் தந்தை அறிந்தவுடன் தான் நேரில் போய் சந்திக்க விருப்பமில்லாமல் தூரத்து உறவினரொருவரை முகாமுக்கு அனுப்பியிருந்தார், அவர் வந்து முரளியுடன் 'குசலம்' விசாரித்தபொழுது முகுந்தன் வெளிநாட்டிலிருந்து திடீரென வந்திறங்கிய செய்தியையும் கூறி அவனைத் தூரத்தில் வைத்து அடையாளம் காட்டவும் செய்தார்.

முரளியும் முகுந்தனைச் சந்தித்துப் பேச ஆர்வமிருந்தும் சந்தர்ப்பம் சரியாக அமையாததால் அதனைத் தவிர்த்துக் கொண்டான். நாலைந்து நாட்களில் முரளி ஜானகியைத்தேடி வந்தான், இப்போதைய மனநிலையில் ஜானகி தன்னை எவ்விதம் வரவேற்பாள் என்பது அவனுக்கு ஒரு பரீட்சை வினா. முகுந்தன் வந்துவிட்டான் என்பது ஒரு புறத்தில் ஏற்பட்ட தாக்கம், முரளி ஒன்றுமில்லாதவனாகி விட்டான் என்பது இன்னொரு புறத்தில். தாக்கங்களின் விளைவுத்திசை எத்தகையது?

ஜானகி ஒரு ஜடமாகவே மாறிவிட்டிருந்தாள். தனக்கும் தன்னைச் சேர்ந்தவர்களுக்கும் ஏன்தான் இப்படித் தொல்லை மேல் தொல்லைகளாக வந்துகொண்டிருக்கின்றன? முகுந்தன் வந்து சேர்ந்ததால் ஏற்பட்டிருக்கும் புதிய திருப்பம், இதில் தான் எந்த முடிவும் எடுக்க முடியாமல் தவிப்பது.. .... முகுந்தன் வந்துவிட்ட செய்தியை முரளி அறியும்போது என்ன திருப்பம் ஏற்படலாம்? அவன் இவளது மனப் போராட்டத்தை எவ்விதம் அணுகுவான்? என்றெல்லாம் குழம்பியிருந்த ஜானகிக்கு முரளி எல்லாம் இழந்து அகதியாக வந்து சேர்ந்த செய்தி பேரதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது. இப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது முரளி தன்னருகில் வந்து நின்றவுடன் - இருவர் கண்களும் கலங்கின. கனத்த மௌனத்திரை நடுவில் நின்றது. சில நாட்களாக வற்றிப் போயிருந்த கண்ணீர் வெள்ளம் கரை புரண்டது ஜானகிக்கு. அவளைத் தேற்றுவதற்குரிய உரிமையும் தகுதியும் தனக்கு உண்டா என்ற சந்தேகத்துடன் மெதுவாக வார்த்தைகளை அளந்து பயன் படுத்தினான் முரளி.

"ஜானு, ஒரு பெண்ணின்ரை வாழ்க்கையிலை நடக்கக் கூடாதது எல்லாம் உன்ரை வாழ்க்கையிலை நடக்குது, விதியை நாங்கள் என்ன செய்யலாம்? ஜானகி, நடந்தது நடந்திட்டுது. இனி நடக்கப்போறதை நினைச்சுப் புது வாழ்க்கைக்கு எங்களை நாங்கள் சித்தப் படுத்திறதைத் தவிர வேறு வழியில்லை"

கலங்கிய அவனது கண்களில் படிந்த கண்ணீர்த் திரையிலே கரைந்த ஓவியமாகத் தெரியும் முகுந்தனைப் பார்த்தபடி மௌனித்திருந்தாள் ஜானகி. முரளி துயரம் ததும்ப அவளையே சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு மௌனமாக விடைபெற்றான்.



# 4

முதிய தலைமுறை தன் நரை மயிர்களைக் கருமயிர்களுக்கிடையில் மறைக்க முயற்சித்தது. தொப்பையைத் தடவிவிட்டுக்கொண்டு கூட்டல்கழித்தல்கணக்குப் பார்த்தது. வெறும் இலக்கங்கள், வெறும் வார்த்தைகள், வெளிவேஷங்கள். உள்ளே அமுக்கப்படும் உஷ்ணப் பெருமூச்சுக்கள், பூச்சுகளுக்குள் ஒளித்திருக்கும் விகாரங்கள், நெளியும் உணர்ச்சிப் புழுக்களைத் துச்சமாக மதிக்கும் வெளித் தோல்கள்..... ஓ! சமுதாயமே! இளைய தலைமுறையின் உணர்ச்சிகள் நிறைந்த உள்ளங்களை நீ எவ்வளவு சுலபமாக மிதித்து நசுக்க முயற்சிக்கிறாய்!

ஊரிலே ஜானகியின் பெற்றோர் அவளுடைய எதிர்காலத்தை நிர்ணயிப்பதற்காகத் தரவுகளை வகைப்படுத்தித் தேற்றங்களைப் பயன்படுத்தி, புதிர்களை விடுவிக்க முனைந்து கொண்டிருக்கின்றனர்.

முகுந்தன் திரும்பி வந்து விட்டான், லட்சாதிபதியாக அவனுடைய சொத்துக்கள் வங்கிக் கணக்குகளில் இலக்கங்களாகவும், தொலைக்காட்சிப்பெட்டியாகவும், குளிர்சாதனப் பெட்டியாகவும் மோட்டார் சைக்கிளாகவும் இதுபோன்ற பிற பொருட்களாகவும் பத்திரமாக இருக்கிறது. அவன் யார் எங்கள் மகளின் பழைய காதலன் ... சீ! இப்படி நாங்கள் முதிய தலை முறையினர் சொல்வதா? அவன் அவளை மணம் முடிக்க விரும்பியவன், இவளுக்கும் அவனைச் செய்யத்தான் விருப்பம்.

இடையில் தவறு நடந்துவிட்டது. முரளி யார்? வெறும் மனிதன். சொத்துக்கள் சுகங்களைப் பறிகொடுத்து விட்டுப் பொறுப்புக்களையும் நம்பிக்கையற்ற எதிர்காலத்தையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுமந்து கொண்டு எங்கள் இனத்தைப் போலவே திக்கற்ற நிலையில் நிற்கும் அகதிதான் முரளி. அவனை மணந்து எங்கள் மகள் நிர்க்கதியாகத் தவிப்பதா? காலம் கடந்துவிடவில்லையே. திருமணப் பதிவு மட்டும்தானே நடந்தது. அதைத் தள்ளி விட்டு

"பெரியோர்களே! நீங்கள்தானே சடங்குகள் சம்பிர தாயங்கள், நீதி, நியாயங்கள் பற்றியெல்லாம் வாய் கிழியக் கத்துபவர்கள். இப்படி ஒரு முரண்பாடான காரியத்தைச் செய்யலாமா? காலங்காலமாகக் கட்டிவந்த உங்கள் குலப் பெருமை என்னுவது?" மெல்ல முணு முணுக்கும் பலவீனமான மனச்சாட்சியின் குரல்.

மூச்! சந்தர்ப்பங்கள் வாய்க்கும்போது சம்பிரதாயமாவது குலப்பெருமையாவது ... நரைத்துச் சடைத்த மீசையின் அடியில் காவியேறிய பற்கள் சிரிக்க முயன்றன.

ஜானகியின் பெயரைச் சுமந்து கொண்டு தந்திச் செய்தி யொன்று தபாலில் பிரயாணம் செய்தது.

"புது வாழ்க்கைக்கு எங்களை நாங்கள் சித்தப்படுத்திற தைத் தவிர வேறு வழியில்லை" என்று என்ன துணிச்சலில் நான் அவளிடம் சொல்லிவிட்டு வந்தேன், என்னிடம் என்ன இருக்கிறது? எல்லாம் இழந்து........ தொழில்கூட என்ன வாகும் என்ற நிச்சயமில்லாமல் ... .. ...

ஒரு இருண்ட எதிர்காலத்தையுடைய நான் அவளுக்கு என்ன வாழ்க்கையைக் கொடுக்கப் போகின்றேன்" முரளியின் இதயம் அலை பாய்ந்து கொண்டிருக்கிறது.

'அவள் பூரணமாக எனக்குரியவளல்லவே! அவளுடைய உடலை சட்டம் எனக்குத் தரச் சம்மதித்தாலும்; அவளுடைய உள்ளம் முழுமையாக என்னை நாடமுடியாது. அந்தக் காத லுள்ளத்துக்குச் சொந்தக்காரன் வேறொருவன். அவன் வந்து விட்டான். முகுந்தனும் ஜானகியும் ஒன்று சேரவைப்பதுதான் நான் செய்ய வேண்டியது.'

'எனக்கே உரிமையான - என்னுடைய உடைமைகளையே இழந்துபோய் வந்திருக்கும் நான் இன்னொருவனுடைய பொருளை எதற்காக அபகரிக்க வேண்டும். அவளை மணந்து தான் நான் இனி என்ன வாழ்க்கையை வாழப்போகின்றேன்.



என்னுடைய வாழ்க்கையின் ஒரு முழுமையான அத்தியாயம் நிறைவாகிவிட்டது. இனி நான் வேறொரு புதிய வாழ்க்கை யை மேற்கொள்ள வேண்டும்.

முகுந்தன் செய்யும் பணி எத்தகையது? அவனது மனவு றுதிதான் எப்படிப்பட்டது. தன்னுடைய விலைமதிக்க முடி யாத சொத்தை இன்னொருவன் அபகரித்துவிட்டான் என்று அறிந்த பின்பும் அதற்காக ஆத்திரமோ பொருமையோ கொள்ளாமல் தனது மக்களுக்காகத்தன் வாழ்க்கையை அர்ப் பணித்து விட்ட அவனது மனப்பான்மை தான் எனக்கு வழி காட்டி, நான் எனது மக்களுக்காகச் சேவை செய்யவேண்டும். மக்களுக்காக ஏர் எடுப்பவன் உழவன். அவன் வயிற்றுக்குச் சோறு போடுபவன். மக்களுக்காக எழுதுகோல் எடுத்தவன் எழுத்தாளன். அவன் அறிவுக்கும் சிந்தனைக்கும் சோறு போடு கிறான். மன உணர்வுகளுக்கும், ஏக்கங்களுக்கும் தீனிபோட்டு எதிர்கால வாழ்க்கையை உருவாக்குவதற்கு நான் எதையா வது எடுத்தாக வேண்டும். ஆம் நான் அவர்களை இணைத்து வைத்து விட்டுப் புறப்படுவேன்.

முகுந்தனை நாடி அவன் புறப்பட்டுக் கொண்டிருக்கும் போது அவனது செய்தியைத் தாங்கிய கடிதம் ஜானகியை நோக்கி நகர்ந்தது.

'துன்பப்பட்டவர்களுக்காக உழைக்கும் போது அதில் எத் தனை இன்பம் இருக்கிறது. வெறுமனே சொத்து சுகங்களும், பெண்டிர் பிள்ளைகளும் என்று வாழ்வதுதானு வாழ்க்கை. எங் களுக்கு மட்டுமே என்று வாழாமல் பிறருக்காகவும் வாழும் இந்த வாழ்க்கையையே எனது வாழ்க்கை பூராவும் நீடிக்கச் செய்யவேண்டும். முகுந்தனின் சிந்தனை வளர்ந்தது.

காதல் கருகி விட்டதும் துன்பம் ஏற்படுவது தவிர்க்க முடியாததுதான். ஆனல், அவள் இனிய வாழ்க்கையை வாழட் டும், முரளி நல்லவர், அவரோடு ஜானகி வாழவேண்டும், என்னை மறந்து. நான் எங்காவது ஓடிப்போய் விடவேண்டும் அப்போதுதான் அவர்கள் மகிழ்ச்சியாக வாழமுடியும்.

முகுந்தனின் செய்தியைத் தாங்கிய கடிதம் ஒன்று ஜான கியை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது.

ஜானகி குழம்புகிருள் —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கை என்பது இதுதானு? ஏமாற்றங்களே எதிர் கொண்டிருந்தால் எப்படி முன்னேறுவது; எனக்குஏமாற்றம். முகுந்தனுக்கு ஏமாற்றம், முரளிக்கு ஏமாற்றம். நான் முகுந்தனை இழந்து முரளியை ஏற்கும்படி நிர்ப்பந்தம். முகுந்தன் என்னை இழந்து சொத்து சுகங்களைத் தேடி என்னத்தைக் கண்டார்.? முரளி தனது உடைமைகள் வேலை.......... சகலதையும் இழந்து என்னையடைந்து என்னத்தை எதிர் பார்க்கப் போகிறுர்? நாம் எல்லோருமாக எதை இழந்து கொண்டிருக்கிறோம்?

ஜானகியின் வீட்டிலிருந்து வந்த தந்தியும், முகுந்தனின் கடிதமும், முரளியின் கடிதமும் ஜானகியின் அறைக்கு வந்து சேர்ந்த போது —

அந்த மூன்றிற்கும் பதிலாக —

"என்னைத் தேடவேண்டாம்" என்ற ஜானகியின் கடிதம் காத்திருக்கிறது.

நிறைந்தது





# இவர்களும் நானும் —

சோர்வுற்ற என் கரங்களுக்குச் சுறுசுறுப்பை ஊட்டிப் புதிய படைப்புகளை ஆக்கவும், அனுப்பவும், போட்டிகளில் வெல்லவும் காரணமாயிருக்கும் எனது வாழ்க்கைத்துணை தாக்ஷாயணிக்கும்,

இந்நாவல் நூல்வடிவில் வருவதற்காக இவற்றைப் பொறுமையோடு பிரதிசெய்து உதவிய எனது உடன்பிறவாச் சகோதரிக்கும்,

அழகிய அட்டையை அமைத்துத்தந்த ஓவியர் மு. விவேகானந்தன், நண்பர் மு, இரவீந்திரன் ஆகியோருக்கும்:

இந்நூலை வெளியிட்டு வைக்கும் யாழ். இலக்கியவட்டத்தினருக்கும்,

தொடர்ந்து என்னை உற்சாகமூட்டி என்னை இலக்கியவானில் பிரகாசிக்கச்செய்கின்ற 'செங்கை ஆழியான்' அவர்கட்கும்,

தமது விளம்பரங்களுக்காக அல்லாமல் எனது நூல்வெளியீட்டுமுயற்சி சிறப்பதற்காக மனமுவந்து அன்பளிப்புக்களை வழங்கியவள்ளல்களாகிய வர்த்தகப்பெருமக்களுக்கும்,

வெளியீட்டிற்கான ஆலோசனைகளையும், ஆதரவுகளையும் நல்கிய நண்பர் எஸ். எஸ். அச்சுதன்பிள்ளைக்கும்.

அழகுற அச்சிட்டு வழங்கிய குருகுலம், சர்வசக்தி அச்சகத்தாருக்கும்.

**மனமார்ந்த எனது**
**நன்றிகள் உரித்தாகுக**

## ஆசிரியரின் பிற நூல்கள் —

1. கனவுப்பூக்கள் (புதுக்கவிதைகள்)
   (சௌமினி - சிவம்)
2. அன்னைபராசக்தி (ஆன்மீகக் கட்டுரைகள்)
3. இலங்கையில் தமிழ்ப் பத்திரிகைகள் சஞ்சிகைகள்
   (தமிழியல் ஆய்வுக்கையேடு)
4. நியாயமான போராட்டங்கள்
   (ரூ. 5,000/- பரிசு பெற்ற சிறுகதைத்தொகுதி)
5. சைவநற்சிந்தனை (ஆன்மீகக் கட்டுரைகள்)
6. சைவாலயக் கிரியைகள் (அச்சில்)


*With the best Compliments from*

# Markandu & Sons

KANDY ROAD, KILINOCHCHI.

General Hardware Merchants & Commission Agents
Rice Millers, Paddy Purchaser & Lorry Transporters
T'phone 339

*BRANCHES*

Dambulla Road,
GALAWELA.
T'phone: 896

Mill Road,
VAVUNIYA.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org